# ஸ்ரீ முனிகிரி (கரந்தை)
# திகம்பர ஜைன திருத்தல வரலாறு



பகவான் மகாவீரர் ஜினாலயம்

ஆசிரியர் :

முனைவர். ஏ. ஏகாம்பரநாதன்

# ஸ்ரீ முனிகிரி (கரந்தை)

# திகம்பர ஜைன திருத்தல வரலாறு

ஆசிரியர்:-

முனைவர் ஏ. ஏகாம்பரநாதனார்.

வெளியீடு:-

திருப்பணிக் குழு,

ஸ்ரீ முனிகிரி திகம்பர ஜிநாலயம்,

கரந்தை-604 410.

வெளியீடு : 1991

படிகள் : 500

பதிப்பு : முதல்

விலை : ரூ. 10/-

அச்சிடுதல் : ஆசாரியர் குந்தகுந்தர் அச்சுப்
பயிற்சி நிலையம்,
குந்தகுந்தர் நகர்–604 502.

---

## உள்ளுறை

★

| | | பக்கம் |
|---|---|---|
| 1 | குந்துநாதர் கோயில் | 5 |
| 2. | புஷ்பதந்தர் கோயில் | 33 |
| 3. | கல் வெட்டுக்கள் | 39 |
| 4. | தோத்திரத்திரட்டுப் பாடல்கள் | 53 |
| 5. | ஸ்ரீ குந்துநாதாஷ்டகம் | 65 |





ஸ்ரீ குந்துநாத பகவான்
மூலவர்

# நுழைவாயில்

'ஸ்ரீ முனிகிரி(கரந்தை) திகம்பர ஜைன திருத்தல வரலாறு' எனும் இவ் வரலாற்று நூல் கரந்தையில் வீற்றிருக்கும் ஸ்ரீ குந்துநாதர் ஜிநாலய வரலாற்றைக் கூறுகிறது. சுமார் 1200 ஆண்டுக்கு முற்பட்ட பழமை வாய்ந்த இந்த ஜிநாலயம் அரசர்களாலும் பொது மக்களாலும் போற்றிப் பாதுகாக்கப்பட்ட செய்தினையும் பல்வேறு கால கட்டங்களில் இந்த ஜிநாலயம் விரிவடைந்த, புதுப்பிக்கப்பட்ட செய்தியினையும் கல்வெட்டுகளின் ஆதார அடிப்படையில் சிறப்பாகக் கூறுகிறது.

இவ்வரலாற்று நூலுக்கு ஆதாரமான கல்வெட்டுகள் பட்டியலும் இந்த ஜிநாலயம் புகழ்பாடும் தோத்திரங்களும் இந்நூலுக்கு மேலும் அணி சேர்க்கின்றன.

எவ்வித ஊதியமும் எதிர் நோக்காமல் அன்பு காரணமாக இவ்வரலாற்று நூலை ஆக்கிக் கொடுத்த சமண சமய வரலாற்றில் ஆழ்ந்த ஞானமுடைய சிறந்த கல்வெட்டாய்வாளர் முனைவர் ஏ. ஏகாம்பரநாதன் அவர்களுக்கு அன்பான நன்றியைக் கூறிக் கொள்கிறோம்.

இந்தப் பழமை வாய்ந்த ஜிநாலயம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு வணக்கத்திற்குரிய ஆர்யிகையர் பால பிரமசாரிணியர் ஸ்ரீ 105 சுபிராகாஷமதி அடிகளார் மற்றும் ஸ்ரீ 105 சுபூஷணமதி அடிகளார் ஆசியுடன் 28—2—91 முதல் 4—3—91 வரை நடைபெறும். ஸ்ரீ குந்துநாத பகவான் "பஞ்ச கல்யாணப் பெருவிழா" நேரத்தில் இந்நூலை வெளியிடுவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்நூலை அழகுற அச்சிட்டுக் கொடுத்த ஆசயாரிர் குந்த குந்தர் அச்சுப் பயிற்சி நிலையத்தாருக்கும் எங்கள் அன்பான நன்றியை உரித்தாக்குகிறோம்.

**திருப்பணிக் குழுவினர்,**

**ஸ்ரீ முனிகிரி திகம்பர ஜிநாலயம்,**

# முன்னுரை

நம் தாய்த்திருநாட்டின் சமய வரலாற்றில் கி. மு. 6-ஆம் நூற்றாண்டு ஓர் திருப்புமுனையாக அமைந்திருந்தது எனில் அது மிகையாகாது. வேத காலத்திலிருந்து தோன்றிய வேள்விகள், வழிபாட்டு முறைகள், மூட நம்பிக்கைகள், சாதிப்பாகுபாடுகள், அதனால் விளைந்த ஏற்றத்தாழ்வுகள், பொருளாதார வலிமை பெற்றோர்களது ஆதிக்கம் முதலிய பல்வேறு காரணங்களால் சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு பல்கிப் பெருகலாயிற்று. சமயத்தின் அடிப்படையில் சமுதாய அந்தஸ்து பெற்றவர்கள் பொது வாழ்விலும், பிறவற்றிலும் வலிமை மிகுந்தவர்களாகத் திகழ்ந்தமையால், பிற பிரிவினர் ஏற்றம் பெற்றவர்களாக இன்றி ஒதுக்கப்படுகின்ற நிலைக்குள்ளாயினர். இத்தகைய சமய-சமுதாய வேறுபாடுகள் மிகுந்துவந்த காலத்தில்தான் நம் நாட்டின் வெவ்வேறு பாகங்களில் புதிய சிந்தனையாளர்கள் தோன்றி மக்களிடையே ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பரப்பி வரலாயினர். இப்பேரறிவாளர்களது சிந்தனைகள் முந்திய சமய, சமுதாய அமைப்புகளில் நிறைந்திருந்த குறைகளை தெளிவுற சுட்டிக்காட்டியும், பாமர மனிதனுக்கும் நன்கு புரிகின்ற வகையில் அரிய கருத்துக்களை எளிய முறையில் விளங்க வைத்தும் சமய - சமுதாய எழுச்சியினை ஏற்படுத்தியிருக்கின்றனர். இத்தகைய பேரெழுச்சியினை நம் நாட்டில் புத்த சமயமும், சமண சமயமும் முன்னின்று செயலாக்கம் பெறச் செய்திருக்கின்றன.

சமண சமயம் கொல்லாமை, வாய்மை, அன்புடைமை முதலிய அறநெறிக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இந்தியப் பெருநிலப் பரப்பின் வெவ்வேறு பகுதிகளிலும் வேரூன்றித் தழைத்த பெருமையை உடையதாகும். இச்சமயத்தவர் எண்ணிறந்த இலக்கிய, இலக்கண நூற்களைப் படைத்தது மட்டுமின்றி, அணிதிகழ் கோயில்களையும், அழகுமிக்க கலைச் செல்வங்களையும் தோற்றுவித்துள்ளனர். தமிழன்னைக்கும், தமிழ்ச் சமுதாயத்திற்கும் இச்சமயச் சான்றோர் ஆற்றிய தொண்டுகள் மிகப் பலவாகும்.

நாட்டு மக்களனைவரும் சமய நெறியில் ஈடுபட்டு இன்பப் பெருவாழ்வு பெறவேண்டும் என்ற பெருநோக்கம் கொண்ட நம் முன்னோர் எண்ணிறந்த தெய்வத் திருக்கோயில்களை உருவாக்கியுள்ளனர். இறையுணர்வின் மூலமாக மக்கள் நல்வழிப்படவேண்டுமென்கிற நல்லெண்ணத்தினால்தான், "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என மொழிவாராயினர். சமயமும் கலையும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தமையால் தமிழகமெங்கும் கோயில்கள் வளர்ச்சி பெறலாயின. சைவ, வைணவ சமயக் கோயில்கள் மட்டுமின்றி, சமண சமயக் கோயில்களும் இத்தகைய ஏற்றத்தினைத் தமிழ் மண்ணில் பெற்றிருந்ததென்பது வரலாறு கூறும் உண்மையாகும்.

தமிழகத்தை வெவ்வேறு காலக் கட்டங்களில் பல்லவ, பாண்டிய, சோழ, விசயநகரப் பேரரசர்களுள் பெரும்பாலானோர் சைவ, வைணவ சமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தபோதிலும், சைன சமயத்தையும் நன்கு ஆதரித்திருக்கின்றனர். இவர்கள் அளித்த ஆதரவின் பயனாக திறந்த வெளிப் பாறைச் சிற்பங்கள் தோற்றுவிக்கப்பட்டும், குடைவரை கோயில்களும், கட்டடக் கோயில்களும் புதியதாக எழுப்பப்பட்டும் இருப்பதைக் காணலாம். பல இடங்களில் முன்பிருந்த சமணக் கோயில்கள் புதியதாக மண்டபங்கள், திருச்சுற்று மதில் முதலியவற்றைப் பெற்று விரிவாக்கம் பெற்றிருப்பதையும் காண இயலும்.

முடியாண்ட மன்னர்கள் மட்டுமின்றி பொருள் படைத்த செல்வர்களும் சமயப் பற்றுமிக்க பொது மக்களும் தங்களது ஊர்களில் கோயில்களைக் கட்டி, அவற்றிற்குப் பொன், பொருள், நிலம் முதலிய பல்வேறு வகையான தானங்களைச் செய்திருக்கின்றனர். இவ்வாறு அளிக்கப்பட்ட தானங்களினால் கோயில்களின் வளர்ச்சி பெருகியதோடு, சமுதாயமும் சிறப்படைய வழி ஏற்படலாயிற்று. சமயப் பணியே முக்கிய நோக்கமாக இருப்பினும், சைன சமயக் கோயில்களும், பிற்காலத்தில் அவற்றைச் சார்ந்த மடங்களும் கல்வி, அன்னதானம், மருத்துவ வசதி முதலிய சமுதாயப் பணிகளையும் செவ்வனே ஆற்றி

வந்தன. இதனால் சமயமும், சமுதாயமும் ஏற்றம் பெற்ற நிலையை அடையலாயின. மக்கள் வாழ்க்கையும், சமயத்துடன் பின்னிப் பிணைந்து செழுமையெனும் பெற்றியை எய்தலாயிற்று. இவ்வாறு காலங் காலமாக கோயில்கள் இறையுணர்வையும், சமுதாயத்தின் தேவைகளையும் பூர்த்தி செய்பவையாகத் திகழ்ந்து வரலாயின. சமயக்கருத்துக்கள், வழிபாட்டு முறைகள் முதலியவை யாவும் வளர்ந்து வரும் சமுதாயத்தின் தேவைகளுக்கேற்ப விரிவாக்கம் செய்யப்பட்டதனால் இத்தகைய கோயில்கள் காலப் போக்கில் எண்ணிக்கையில் பெருகியதோடு மட்டுமின்றி பெரிய அளவில் கட்டப்பெற்று வலிமை மிக்க அமைப்புகளாகத் திகழ்ந்தன. காலச் சுழலில் சமண சமயமும், இச்சமயக் கோயில்களும் பலமுறை சோதனைகளுக்குட்படுத்தப்பட்டிருந்த போதிலும், அவற்றையெல்லாம் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டு இன்றளவும் நம் தமிழகத்தில் நிலைத்திருப்பது பெருமைக்குரிய ஒன்றாகும்.

**—டாக்டர். ஏ. ஏகாம்பரநாதன்.**

# குந்துநாதர் கோயில்

காஞ்சிபுரத்திலிருந்து பதினெட்டு கிலோ மீட்டர் தொலைவில் கலவைக்குச் செல்லும் சாலையை ஒட்டி அமைந்துள்ளது கரந்தை என்னும் திருத்தலமாகும். இவ்வூர் பண்டைக்காலத்திலிருந்தே திருப்பறம்பூர், கரந்தை என்னும் பெயர்களைப் பெற்றிலங்கியிருக்கிறது. ஆனால் தற்காலத்தில் இந்த ஊரின் தென் பகுதி கரந்தை எனவும், வட பகுதி திருப்பறம்பூர் எனவும் தனியூர்களாகத் திகழ்கின்றன. இவ்விரு சிற்றூர்களுக்கு இடைப்பட்ட பகுதியில் குளம் ஒன்று உள்ளது.

கரந்தையாகிய திருப்பறம்பூரில் பதினேழாவது தீர்த்தங்கரராகிய குந்துநாதருக்குக் கோயில் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. இதனை முனிகிரி என்றழைப்பதும் உண்டு. இந்த கிராமத்தைச் சுற்றியுள்ள பகுதியில் முன்பு சிறிய குன்றுகள் காணப்பட்டதாகவும், அக்குன்றுகளில் சமணசமயத்துறவியர் தவம் மேற்கொண்டதாகவும் கூறப்படுகிறது. அதாவது முனிவர்கள் உறையும் குன்றுகளைக் கொண்ட பகுதியாக இது விளங்கியதால், முனிகிரி என்னும் பெயர் ஏற்படலாயிற்று. இத்தலத்தைச் சுற்றியுள்ள ஊர்கள் எவற்றிலும் கருங்கல் பாறைகள்கிடையாததால், காலப்போக்கில் கரந்தையிலுள்ள சிறிய குன்றுகள் உடைக்கப்பட்டு கோயில்கள், கட்டடங்கள்

ஆகியவை கட்டுவதற்குப் பயன் படுத்தப்பட்டதாகத் தெரியவருகிறது. தற்போது இவ்வூரில் ஆங்காங்கே சில மிகச் சிறிய பாறைகள் மட்டும் எஞ்சியிருப்பதைக் காணலாம்.

## குந்துநாதர் கோயில்

கரந்தையிலுள்ள கோயில் வளாகத்தின் நடுப் பகுதியில் குந்துநாதர் கோயிலும், அதன் தென்புறம் மகாவீரர் கோயிலும், வடபுறம் ஆதிநாதர் கோயிலும் அதனையடுத்து தரும தேவி யக்ஷி கோயிலும் காணப்படுகின்றன. இவற்றுள் நடுநாயகமாகத் திகழ்வதும், காலத்தால் முந்தியதும் குந்துநாதர் கோயிலாகும். எஞ்சியுள்ளவையனைத்தும்வெவ்வேறு காலக்கட்டங்களில் தோற்றுவிக்கப்பட்டவையாகும்.

இக்கோயில் கருவறை. அர்த்தமண்டபம், முக மண்டபம், மகாமண்டபம், இதனையடுத்து மற்றொரு முகமண்டபம், சாந்திமண்டபம் ஆகிய பகுதிகளைக் கொண்டதாகும். இவற்றுள் கருவறை, அர்த்த மண்டபம், முகமண்டபம் ஆகிய பின்பகுதிக்கட்டடம் காலத்தால் முந்தியதாகும். கருவறையைச் சுற்றி அடுத்தடுத்து இரண்டு சுவர்கள் சிறிது இடைவெளி விட்டு எழுப்பப்பட்டிருப்பதால் இக்கோயில் 'சாந்தார' வகைக்கோயிலாகும். கருவறை, அர்த்தமண்டபம், முக மண்டபம் ஆகியவற்றின் அடித்தளம் மணற்கல்லால (sand stone) கட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க

தாகும். மேலும் சுவர்ப்பகுதியிலும் பல இடங்களில் மணற்கல் பாளங்கள் காணப்படுகின்றன. இந்த கோயிலின் அடித்தளம் உபானம், ஜகதி, திரிபட்டக் குமுதம். மேல்பட்டிகை ஆகிய உறுப்புகளைக் கொண்டதாகும். இக்கோயிலிலுள்ள காலத்தால் முந்திய சாசனம் பல்லவ மன்னனாகிய மூன்றாம் நந்திவர்மன் காலத்தைச் (கி.பி 846-869) சார்ந்ததாக இருப்பதால், மிக்கவாறும் குந்துநாதர் கோயில் இந்த அரசனாட்சியிலோ அல்லது அதற்குச் சற்று முன்போ தோற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறெனில் இது கி.பி.9 ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டதென்பது தெளிவாகிறது. பல்லவப் பேரரசர்கள் காலத்தில் கட்டப்பெற்ற மிகுதியான கோயில்கள் மணற்கல்லினால் உருவாக்கப்பட்டிருப்பதும் இங்கு நினைவிற்கொள்ள வேண்டிய கருத்தாகும் இம்மணற்கல் காலப்போக்கில் உதிர்ந்துவிடும் தன்மை உடையதால், இந்தக் கோயிலில் முழுமையான பல்லவர் காலக்கலைப்பாணியைக் காணல் அரிதாகும். மேலும் இக்கோயில் பல்வேறு காலக் கட்டங்களில் புதுப்பிக்கப்பட்டும் வந்திருப்பதால் பல்லவர்காலக் கலைப்பாணியை இழக்க நேரிட்டிருக்கிறது. எவ்வாறாயினும் இக்கோயில் கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் கருவறை, அர்த்தமண்டபம், முகமண்டபம் ஆகியவற்றையும், அதனைச் சுற்றி பிரகாரச் சுவரையும், அதன் கிழக்குப் பகுதியில் கோபுரத்தையும் உடையதாகத் திகழ்ந்திருக்கிறது.

11 கி. பி. ஆம் நூற்றாண்டில் குந்துநாதர் கோயில் புதுப்பிக்கப்பட்டதோடு மட்டுமின்றி புதிய தாக இதனுடன் மகா மண்டபம், படிக்கட்டுகள் ஆகியவை இணைக்கப்பட்டிருக்கின்றன. இதனைத் தெளிவுறுத்தும் வகையில் முந்திய முகமண்டபத்தின் முன்பகுதியிலுள்ள அரைத்தூண்களும், மகாமண்ட பத்திலுள்ள கல்வெட்டுகளும், சிற்பங்களும் அமைந் துள்ளன. மிக்கவாறும் இத்தகைய திருப்பணிகள் சோழ மன்னனாகிய வீரராஜேந்திரனது ஆட்சியின் போது (கி. பி. 1063 - 1069) நடைபெற்றிருக்க வேண்டும். எனவேதான் இந்தக் கோயில் அபபோ திருந்து **வீரராஜேந்திரப் பெரும்பள்ளி** என அழைக்கப் பெறலாயிற்று.

அர்த்த மண்டபத்திலுள்ள அரைத் தூண்கள் நீள்சதுர அடிப்பகுதி, பட்டை தீட்டப்பெற்ற கால், கலசம், கும்பம், தாமரை இதழ்களைக் கொண்ட பலகை முதலிய உறுப்புகளைப் பெற்றுத் திகழ் கின்றன. இவை கி. பி. 11-ஆம் நூற்றாண்டைய சோழர் கலைப்பாணியை விளக்குபவை யாகும். மகா மண்டபத்திலுள்ள தூண்கள் உருண்டையாகவும் அதற்கு மேல் நீள்சதுர போதிகையையும், அதில் முக்கோண வடிவினையும் கொண்டு விளங்குகின்றன. மேலும் அர்த்த மண்டபத்தின் நுழைவாயிலைக் காவல் செய்யும் துவார பாலகர் சிற்பங்களும் சோழர் காலக் கலைக்குரிய சான்றுகளாகத் திகழ்கின்றன.



குந்துநாதர் திருக்கோயில் கோபுரம்



ராஜ கோபுரம்



ராஜ கோபுர பக்க பகுதி



ஸ்ரீ பகவான் குந்துநாதர் கோயில் உள்பகுதி

எனவே கி. பி. 11-ஆம் நூற்றாண்டில் இந்த கோயில் புதுப்பிக்கப்பட்டதோடு மகா மண்டபம் படிக்கட்டுகள் ஆகியவற்றையுடையதாய் விரிவாக்கம் பெற்றிருக்கிறது. மகாமண்டபம் உயரமாக இருப்பதால் இதனையொட்டி இருபக்கங்களிலிருந்தும் மேலே ஏறிச்செல்வதற்கேற்ற வகையில் மேடையுடன் கூடிய படிக்கட்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இந்தப்படிக்கட்டுகளின் இருபுறமும் சுருள் யாளி அமைப்பினைக் கொண்ட குறுகிய சுவர் தடுப்பும் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

இவை யனைத்திற்கும் முன்பாகவுள்ள முக மண்டபமும், சாந்தி மண்டபமும் பிற்காலத்தில் கட்டப்பட்டவையாகும்.

கி.பி. 11-ஆம் நூற்றாண்டிலேயே பிரகாரச்சுவரை ஒட்டி உட்பகுதியில் தூண்களைக் கொண்ட உள் திருநடைமாளிகை (pillared cloister) நிறுவப் பட்டிருக்கிறது. இவற்றிலுள்ள தூண்களும், மகா மண்டபத்திலுள்ள தூண்களும் ஒரே கலை பாணியைப் பெற்றிலங்குவது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் இந்த உள் திருச் சுற்று மாளிகையும் சிதைந் தமையால் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. தற்போது தென்புறத்தில் மட்டும் இதன் சுவடுகளைக் காண இயலுமேயொழிய, எஞ்சிய பகுதிகளில் முற்றிலுமாக அழிந்துவிட்டது.

## மேற்றிசைப்பெருமாள் கருவறை

கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் குந்துநாதர் கருவறையின் பின்புறத்திலுள்ள மாடத்தில் நிறுவப் பெற்றிருந்த பார்சுவ நாதர் சிற்பத்தை ஒட்டிச்சிறிய கருவறையும், மண்டபமும் தோற்விக்கபட்டிக்கின்றன. இது உயரமான தேவக்கோட்டம் ஆகையால் இதனை அடைவதற்கேற்ற வகையில் படிக்கட்டுகளும் அமைக் கப் பட்டிருக்கின்றன. இந்த பார்சுவதேவப்பெருமான் மேற்கு நோக்கியவராக இருப்பதால் 'மேற்றிசைப் பெருமாள்' என அழைக்கப் பெற்றிருப்பதை இங்குள்ள சாசனங்களே திறம்பட விளக்குகின்றன. தற்போது இதில் பார்சுவ நாதரது சுதை வடிவம் உள்ளது. முன்னர் இதில் இடம் பெற்றிருந்த கல் சிற்பம் குந்துநாதர் கோயிலின் அர்த்த மண்டபச் சுவரில் நிறுவப்பட்டிருக்கிறது.

கி.பி 1156ஆம் ஆண்டில் இந்த திருமேற்றிசைப் பெருமாள் திருவுருவத்தின்முன்னர் ஒரு விளக்கு எரிய விடுவதற்காக 300 காசுகள் வழங்கப்பட்டிருகின்றன. இவ்விளக்கிடும் பணியினைத் தவராமல் செய்து வருவதாகக் கோயிலைச் சேர்ந்த காணியாளன் ஒப்புக் கொண்டதாகவும் அறிய வருகிறோம்.[1]

## மகாவீரர் கோயில்

குந்துநாதர் கோயிலுக்கு அடுத்தாற்போன்று தென் புறத்தில் மகாவீரருக்கும் தனிக் கோயில் எழுப்

பப் பட்டிருப்பதைக் காணலாம். இது கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டதாகும். அப்போது இக்கோயில் கருவறை, முகமண்டபம் ஆகிய பகுதிகளைக் கொண்டிருந்திருக்கிறது. இதன் அடித் தளத்தைத் தவிர பிறபகுதிகள் பலமுறை புதுப்பிக்கப் பட்டமையால் பண்டைய கலையம்சங்களை இதில் காணமுடியவில்லை. இக்கோயில் கி. பி. 12 ஆம் நூற்றாண்டிலிருந்து திருக்காட்டாம்பள்ளி எனவும், கருவறையில் இடம் பெற்றிருந்த மகாவீரர் திருவுருவம் திருக்காட்டாம்பள்ளி ஆழ்வார் என்றும் பெயர் பெற்றிருந்ததாக அறிய வருகிறோம்.[2]

பிற்காலத்தில் திருக்காட்டாம்பள்ளி புதுப்பிக்கப் பட்டபோது இதன் கருவறை முதல் தளத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. இவ்வாறு மாற்றம் பெற்ற முதல் தளத்தினுள் மகாவீரரது சுதை வடிவம் நிறுவப் பெற்றிருக்கிறது. மேலும் இந்த தளத்தின் தெற்கு, மேற்கு, வடக்குப் பகுதிகளில் மாடங்கள் ஏற்படுத்தப் பட்டு அவற்றுள்ளும் மகாவீரரின் சுதை வடிவங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. இந்தப் புதிய கருவறைக்கு ஏறிச் செல்வதற்கேற்ற வகையில் கோயிலின் முன் பகுதியிலிருந்து ஏராளமான படிகள் உயரமாக அமைக்கப் பெற்றிருக்கின்றன. மிக்கவாறும் இத் தகைய மாற்றங்கள் கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் அல்லது அதற்குப் பிறகு நிகழ்ந்திருக்க வேண்டு மெனத் தோன்றுகிறது. இந்தக் கருவறையில் இடம்

பெற்றிக்கும் சுதை வடிவங்கள் கி. பி. 15–16 ஆம் நூற்றாண்டைய கலைப்பணியில் அமைந்திருப்பதை நோக்கும் போது இக்கருத்து வலிமை பெறுகிறது.

மகாவீரர் கோயிலின் கருவறைப் பகுதியிலிருந்து கிழக்கு நோக்கினால் மாமண்டூர்மலை தொலைவில் இருப்பது தெரியும். இந்த மலையிலுள்ள குகைப்பள்ளியை இங்கிருந்தே காண்பதற்காகத்தான் இக்கோயிலின் கருவறை உயரமான தளத்தில் ஏற்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. தற்போது இந்தக் காட்டாம் பள்ளியினைச் சுற்றி புதிதாகச் சுவர்கள் எழுப்பப்பட்டுள்ளதால், அடித்தளத்தினைத் தவிர எஞ்சிய சுவர்ப் பகுதிகள் முற்றிலும் மறைக்கப்பட்டிருக்கின்றன.

## ரிஷபநாதர் கோயில்

குந்துநாதர் கோயிலுக்கு வடபுறத்தில் ரிஷபநாத தீர்த்தங்கரர் கோயில் ஒன்றுள்ளது. இக்கோயிலின் கருவறை அரை வட்ட வடிவமாகவும் அதற்கு முன்புள்ள மண்டபம் சதுர வடிவமாகவும் இருக்கின்றன. எனவே இது கஜபிரிஸ்டம் அல்லது தூங்கானை மாடம் எனப்படும் கோயில் வகையைச் சார்ந்ததாகும். கி. பி. 15ஆம் நூற்றாண்டைய கலைப் பாணியைப் பெற்றிலங்கும் இத்திருக்கோயிலின் விமான மேற்பகுதியிலுள்ள தளம் சிகரம் ஆகியவற்றைத் தவிர எஞ்சிய பகுதிகள் கருங்கல்லினால் கட்டப்பட்டவை யாகும். முன்பு இந்த கோயில்

கரந்தையை அடுத்துள்ள ஆலங்காட்டா மலை என்னு மிடத்தில் இருந்ததாகவும், ஏறத்தாழ ஐம்பது ஆண்டு களுக்கு முன்பு அங்கிருந்து சிதைவுறாமல் பிரித்தெடுத் துக் கொண்டுவந்து இங்கு நிறுவியதாகவும் கூறப் படுகிறது. கரந்தைக்குச் சற்று தொலைவிலுள்ள திருப்பணங்காடு என்னும் ஊரில் வாழ்ந்த சிலர் இக் கோயில் இந்து சமயக் கோயில் எனக் கூறி உரிமை கொண்டாட முயன்றதால் ஆலங்காட்டா மலை யிலிருந்து இங்கு கொணரப் பட்டிருக்கிறது. கரந்தை யிலுள்ள சமண சமயத்தவர் இக்கோயிலின் பின்புறச் சுவரில் தீட்டப்பெற்றிருக்கும் தீர்த்தங்கரர் சிற்றுருவச் சிற்பத்தினைக் காட்டி இது சமணக் கோயில்தான் என உண்மையினை நிலை நாட்டியதாகவும் கூறப் படுகிறது.

## தருமதேவி கோயில்

குந்து நாதர் கோயிலிலுள்ள துவஜ ஸ்தம்பத் திற்கு வடக்கில் தருமதேவியக்ஷிக் கெனத் தனிக் கோயில் கட்டப்பட்டிருக்கிறது. கருவறை, மண்டபம் ஆகியவற்றைக் கொண்ட இந்தக் கோயிலும் கி.பி. 15 அல்லது16 ஆம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்ட தாகும். இக்கோயிலில் தருமதேவி சிங்க வாகனத்தின் மீது வலது காலை வைத்தவாறு பீடமொன்றில் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறாள். இத்தேவி யின் திருவடிவம் சுதையால் செய்யப்பட்ட தாகும்.

அகளங்க முனிவருக்கு இத்தேவி முன்பு உதவியமை யால் அவர் புத்த சமயத்தவருடன் சமய வாதில் வெற்றி பெற்றார் எனக் கூறப்படுகிறது. இதற்கு ஏற்ப மண்டபத்தின் மேற்பகுதியில் அகளங்க முனிவரின் சிற்றுருவச்சிற்பம் ஒன்று வடிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அருளுருவாய்த் திருக்கோலம் கொண்டு உள்ள இவ்வன்னை மக்களுக்கு குறைவற்ற செல்வத்தையும், மகிழ்ச்சி நிறைந்த நல்வாழ்வையும் அளிப்பவள் எனக் கருதப்படுகிறது. இதனால் இத்தேவிக்கு சிறப்பு வழிபாடுகளும் நடத்தப் பெறுகின்றன. குறிப்பாகப்பெண்டிர் இவ்வழிபாட்டிற்கு அதிக முதன்மை அளித்து வருகின்றனர்.

## திருச்சுற்று மதிலும், கோபுரமும்.

குந்து நாதர் கோயிலைச் சுற்றி திருச் சுற்று மதிலும், அதன் கிழக்குப் பகுதியில் கோபுரமும் கி.பி. 9 ஆம் நூற்றாண்டிலேயே கட்டப் பட்டிருக்கின்றன. கோபுரத்தின் உட்பகுதியிலுள்ள கற்களில் மூன்றாம் நந்திவர்ம பல்லவனது இரண்டு சாசனங்கள் இடம் பெற்றிருப்பதிலிருந்து இவ்வுண்மை நன்குபுலப்படும்.[3] திருச்சுற்றுமதிலின் அடிப்பகுதியில் மிகுதியாக மணற் கல் பயன்படுத்தப்பட்டிருப்பதும் இங்கு நினைவு கூரத்தக்க தாகும். ஆனால் பிற்காலத்தில் இந்த மதிலின் உயரம் அதிகரிக்கப்பட்டிருப்பதால் ஏறத் தாழ ஆறு அடி உயரம் வரையிலும் மணற் கல்லும்,

அதற்கு மேல் செங்கற்களும் காணப்படுகின்றன. பல முறை இந்த மதிற்சுவர் சிதைந்தமையால் ஆங்காங்கே கருங்கற்கள் புகுத்தப்பட்டிருக்கின்றன. இந்தக் கோயிலின் கோபுரம் பழுதடைந்தமையால் கி.பி.1747 ஆம் ஆண்டு அகஸ்தியப்ப நயினார் என்பவர் புதுப்பித்து நல்ல நிலைக்குக் கொண்டு வந்ததாகக் கல்வெட்டொன்றின் வாயிலாக அறிய வருகிறோம்.[4] பிற்காலத்திலும் இந்த கோபுரம் சீர்கெட்டதால் 1893-ஆம் ஆண்டு திருப்பறம்பூரைச் சார்ந்தவரும், மாவட்ட உதவி ஆட்சியாளராகத் திகழ்ந்தவருமாகிய ஸ்ரீ பாலையா என்பவரின் துணைவியரான குணமாலையம்மாள் கோபுரத்தையும், திருச்சுற்று மதிலையும் செப்பனிட்டு 'பிரதிஸ்டா மகோத்ஸவம்' செய்ததாக அறியக் கிடக்கிறோம்.[5] இந்த அம்மையார் சித்தாமூர் கோயிலில் பிரம்மதேவர் முதலிய ஐந்து சாசன தேவதைகளுக்குச் சிறிய கருவறைகளைக் கட்டி அவற்றில் தெய்வ திருவுருவங்களை நிறுவியமையும் குறிப்பிடத்தக்கதாகும். தற்போது குந்துநாதர் கோயிலின் கோபுரம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

## அகளங்கரும், கரந்தையும்

சமண சமயப் பேரறிவாளராகிய அகளங்க தேவருக்கும் கரந்தைக்கும் நெருங்கிய தொடர் இருந்ததாகத் தெரியவருகிறது. முன்பொருகால் இவர் அழிபடை தாங்கி என்னும் தலத்தில் வாழ்ந்த புத்த சமயத் துறவியருடன் காஞ்சீபுரத்தினை ஆண்ட

இமசீதளன் என்னும் அரசனது சபையில் சமயவாதம் செய்து வெற்றி பெற்றதாகக் கூறப்படுகிறது.[6] இவர் சமயவாதில் வெற்றியடைவதற்குக் கரந்தையில் குடி கொண்டிருக்கும் தருமதேவி யன்னை துணை புரிந்தாள் என மரபு வழிச் செய்தியும் இங்கு நிலவுகிறது. மேலும் அகளங்கர் இத்தலத்தில் வந்து தவம் புரிந்ததாகவும் கூறப்படுகிறது. பிற்காலத்தில் பாடப் பெற்ற தோத்திரங்களில் இச்செய்திகள் இடம் பெற்றிருக்கின்றன. திருப்பறம்பூர் தருமதேவதையின் மீது பாடப் பெற்ற பத்து பாடல்களுள் ஒன்று,

**"அறமே விளங்க வகளங்க மாமுனியன் பினின்று**
**திருமாறு கொண்டவத் தீவினைப் புத்தர்ச் செயித்தவளே**
**நிறமான பச்சை நிறத்தவ ளேநிதி போலுதவும்**
**பறவோர் புகழ் பறம்பாபுரி மேவிய சுந்தரியே"[7]**

எனப் பகருகிறது.

இச்செய்தியினை அறிவுறுத்தும் வகையில் குந்துநாதர் கோயிலில் சிற்ப வடிவ மொன்றும், இவ்வூரிலுள்ள குளக்கரையில் அகளங்கர் மண்டபம் ஒன்றும் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. குந்துநாதர் கோயிலின் கிழக்குப் பிரகாரச் சுவரில் ஒரு கல்லில் தவக் கோலத்திலுள்ள முனிவர், புத்தகம் வைக்கும் தாங்கி, கமண்டலம், முக்குடை, மயிற்பீலி, கும்பம், பாதக் குறடுகள் ஆகியவை மென்கோட்டு வடிவங்களாகத் தீட்டப் பட்டிருக்கின்றன. இதிலுள்ள



அகளங்கர் திருவடி மண்டபம்



கூஷ்மாண்டி அம்மன் கோயில் கோபுரம்

முனிவர் திருவுருவம் அகளங்கரைக் குறிப்பதாக நம்பப்படுகிறது. மணற் கல்லில் இவை செதுக்கப் பட்டிருப்பதால் காலப் போக்கில் சிதையலாயிற்று. எனவே ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இவற்றை அடுத்துள்ள கருங்கல்லில் புதியதாக மேற் கூறிய வடிவங்களைச் செதுக்கியதோடு, அவற்றிற்கு 'அகளங்காச்சாரியார்' எனப் பொறித்தும் வைக்கப் பட்டிருக்கிறது. இத்திருவுருவத்திற்கு வழிபாடு செய் யும் வழக்கம் ஏற்பட்டமையால், அப்போது உயரமான படிக்கட்டுகளுடன் கூடிய மேடை ஒன்றும் அமைக்கப் பட்டிருப்பதைக் காணலாம்.

கரந்தைக்கும், திருப்பறம்பூருக்கும் நடுவிலுள்ள குளக்கரையில் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு அகளங்கர் மண்டபம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. இதன் நடுப் பகுதியில் பீடமொன்றில் இரண்டு திருவடிகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. அகளங்கரை நினைவு கூரும் வகையில் தோற்றுவிக்கப்பட்ட இந்த திருவடிகளுக்கு திருவிழாக் காலத்தில் சிறப்பு வழிபாடு செய்வது வழக்கமாக இருந்து வருகிறது. எனவே அகளங்கருக்கும், கரந்தைக்கும் இருந்த தொடர் பினை வலியுறுத்தும் வகையில் சிற்ப வடிவங்களும், திருவடி மண்டபமும் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன என்பது புலனாகும்.

**சிற்பங்கள்**

குந்துநாதர் கோயிலில் அதிக அளவிலான

சிற்பங்கள் இல்லை. இக்கோயில் பல்லவராட்சியின் போது தோற்றுவிக்கப்பட்டிருந்த போதிலும், அக் காலத்தைச் சார்ந்த சிற்பங்கள் எவையும் இங்கு இல்லை. சோழர் காலத்தில் கோயில் புதுப் பொலிவு பெற்றபோது மாடங்களில் சிற்பங்கள் நிறுவப் பட்டிருக்கின்றன. ஆனால் இவை காலப்போக்கில் மாடங்களிலிருந்து அகற்றப்பட்டு முக மண்டபத்தின் உட்சுவரில் நிறுவப் பட்டிருக்கின்றன. இவற்றுள் பார்சுவநாதர் சிற்பமும், பாகுபலி சிற்பமும்தான் தற்போது எஞ்சியுள்ளன. முக மண்டபத்தின் வலது புறத்தில் அழகு மிக்க பார்சுவ தேவரின் புடைப்புச் சிற்பம் காணப்படுகிறது. இத்தீர்த்தங்கரர் தாமரை மலராலான பீடமொன்றில் எழிலுற நின்றவண்ணம் காட்சியளிக்கிறார். இவரது தலைக்கு மேல் ஐந்து தலைப் பாம்பு படம் விரித்த நிலையில் உள்ளது. வீதராகம் காட்டும் முகப் பொலிவும், வாளிப் பான உடலமைப்பும் இத்திருவடிவின் சிறப்பான அம்சங்களாகும். கி. பி. 11-ஆம் நூற்றாண்டுக் கலைப்பாணியைப் பெற்றிலங்கும் இத்திருவுருவம் முற்காலத்தில் கருவறையின் பின்புறச் சுவரிலுள்ள மாடத்தில் நிறுவப் பெற்றதாகும். இதனைத்தான் இங்குள்ள சோழர் காலக் கல்வெட்டொன்று திருமேற் றிசைப் பெருமாள் எனத் திறம்படக் கூறுகிறது. இத்தேவரின் திருவடிக்கருகில் வழிபடுவோர் சிற்பம் ஒன்று சிறியதாக வடிக்கப்பட்டிருக்கிறது.

முக மண்டபத்தின் இடது புறச்சுவரில் நின்ற கோலத்தில் உள்ள பாகுபலியின் சிற்பம் நிறுவப் பட்டிருப்பதைக் காணலாம். ஆழ்ந்த தியானத்தில் மூழ்கியிருக்கும் இத்தேவரின் கைகளையும், கால்களை யும் செடிகள் பின்னிப் பிணைத்துள்ளன. காலருகில் இருக்கும் புற்றிலிருந்து இரண்டு பாம்புகள் தலைகளை தூக்கித் தவம் செய்யும் கோமடேஸ்வரரை நோக்கிய வாறுள்ளன. இச்சிற்பத்தின் அமைதியான முகப் பொலிவு, சற்று பருத்த உடலமைப்பு அசைவற்றுக் கம்பீரமாக நிற்கும் தோற்றம் முதலியன யாவும் சிற்பக் கலைஞனின் கைவண்ணத்தைப் படம் பிடித்து காட்டுபவையாகும். இதன் தனிச் சிறப்பு என்னவென் றால் பாகுபலியின் இரண்டு தோள்களிலும் சடைமுடி தோள் மாலையைப் போன்று படைக்கப்பட்டிருப்ப தாகும். அருளொளியின் வடிவாய் மிளிரும் இவ் வரிய கலைச் செல்வமும் கி. பி. 11-ஆம் நூற்றாண் டைச் சார்ந்ததாகும்.

ரிஷபநாதர் கருவறையில் காணப்படும் அத்தீர்த் தங்கரரின் சிற்பம் கி. பி. 15, 16-ஆம் நூற்றாண்டைய கலைப்பாணியைப் பெற்றிலங்குகிறது. பீடமொன்றில் வீற்றிருக்கும் இத்தேவரின் இரு புறமும் சாமரம் வீசுவோர் சிற்பங்கள் வடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த சாமரம் வீசுவோர் திருமேனிகளிலுள்ள ஆடை, அணிகலன்கள் அலங்கார வேலைப்பாடுடையவை யாகும்.

குந்துநாதர், மகாவீரர், தருமதேவி கருவறைகளில் சுதை வடிவங்களே காணப்படுகின்றன. இவற்றுள் குந்துநாதர் சுதை வடிவத்தைச் சுற்றிலும் உட்புறச் சுவர்களில் இந்திரன், பிற தேவர்கள் ஆகியோரது சுதை வடிவங்களும் இடம் பெற்றிருக்கின்றன. இந்த சுதை வடிவங்கள் அனைத்தும் கி பி. 15-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் நிறுவப்பட்டவையே யன்றி பழமையானவை யல்ல.

இக்கோயிலில் தீர்த்தங்கரர்கள், யக்ஷன், யக்ஷி ஆகியோரையும், நவதேவதை, அஷ்டமங்கலச் சின்னங்கள், மேரு, சுதஸ்கந்தம் ஆகியவற்றையும் குறிக்கின்ற பல செப்புத்திருமேனிகள் உள்ளன. இவையும் 18, 19-ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்தவையேயன்றி தொன்மையும், கலைத்திறமையும் உடையவை யல்ல.

**பாதங்கள்**

குந்துநாதர் கோயிலின் கோபுரத்திற்கு அருகில் காணப்படும் பீடமொன்றில் இரண்டு திருவடிகள் பொறிக்கப்பட் டிருந்திக்கின்றன. இவை சமந்திர பத்திரர் என்னும் அறவோரது திருவடிகளைக் குறிப்பதாகும். இதன் பீடத்தில் புஷ்பசேனை யோகிந்தரின் குருவாகிய சமந்திரரது புகழினைக் கூறும் வகையில் கல்வெட்டு எழுதப்பட்டுள்ளது. கி. பி. 13-ஆம் நூற்றாண்டைய வரி வடிவம் கொண்ட இச்சாசனத்தில் சமந்தபத்திரரின் புகழைச் சூரியனுக்கும், அப்புக

மூாகிய சூரியன் குடிகொண்டிருக்கும் புஷ்பசேனரின் இதயம் தாமரைக்கும் ஒப்பிடப் பட்டிருக்கின்றன. தற்போது இந்த திருவடிகளைக் கொண்ட பீடம் கோபுரத்திற்கு அருகில் காணப்படவில்லை. இது என்னவாயிற்று என்பதுபற்றி அறிவதற்கில்லை. சமந்திரபத்திரர் திருப்பருத்திக் குன்றத்திலிருந்த மடத்தை நிர்வகித்து வந்த மடாதிபதியாக இருக்க வேண்டும். இவரது சீடர் புஷ்பசேன யோகிந்திரர் என்பது தெளிவாகிறது. ஆனால் இந்த புஷ்பசேன யோகிந்திரர் திருப்பருத்திக் குன்றிலுள்ள கல்வெட்டு குறிப்பிடும் புஷ்பசேன வாமனாச்சாரியா ரல்லர். ஏனெனில் புஷ்பசேன வாமனாச்சாரியாரின் குரு வாகத் திகழ்ந்தவர் மல்லிசேன வாமனாச்சாரியாரே யன்றி,[9] சமந்தபத்திரர் அல்லர் என்பது அறியற் பாலதாகும்.

அகளங்கர் மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள பீடத்தில் அம்மாதவரது திருவடிகள் செதுக்கப்பட் டுள்ளமை பற்றி முன்பே கூறப்பட்டுள்ளது. குந்து நாதர் கோயிலின் கிழக்கு சுற்றுமதிலை ஒட்டி அமைக் கப்பட்டிருக்கும் மேடையிலும் திருவடிகளைக் கொண்ட மற்றொரு பீடம் காணப்படுகிறது. இந்த திருப்பாதங்கள் முனிபத்திர சுவாமிகளது திருவடி களைக் குறிப்பவை யாகும். இப்பீடத்தில் **"ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமன் முனிபத்ர சுவாமி"** எனப்

பொறிக்கப்பட்டிருப்பதன் மூலம் இவ்வுண்மை வெளிப் படுகிறது.[10]

இக்கல்வெட்டு குறிப்பிடும் முனிபத்திர சுவாமி களும், கி. பி. 1`16-ஆம் ஆண்டில் சித்தாமூர் மடத் தின் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்தி வந்த முனிபத்திராச்சாரியாரும் ஒருவரே யாவர். இச்சாச னத்தின் வரி வடிவமும் 19-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருப்பது இக்கருத்தினை நிலை நாட்டு வதற்குத் துணை புரிவதாகும். இவ்வாறு இத்தலத் தில் அகளங்கர், சமந்தபத்திரர், முனிபத்திரர் ஆகிய அறவோர்களது திருவடிகள் தீட்டப்பெற்று வழிபாட் டிற்குரியனவாகத் திகழ்வது குறிப்பிடத் தக்கதாகும்.

## கல்வெட்டுச் செய்திகள்

கரந்தையிலுள்ள குந்துநாதர் கோயிலில் பதி னேழு கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவை கி. பி. 9-ம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 19-ஆம் நூற் றாண்டு வரையிலுமுள்ள காலக்கட்டத்தைச் சார்ந்த வை யாகும். இவற்றுள் காலத்தால் முந்தியது பல்லவ மன்னனாகிய மூன்றாம் நந்திவர்மனது ஆட்சியின் போது (கி. பி. 846-869) பொறிக்கப்பட்டவையாகும். கோபுரத்தின் உட்பகுதியில் இடம் பெற்றிருக்கும் இந்த அரசனது இரண்டு சாசனங்களும் சோழ மன் னனை நந்திவர்மன் தெள்ளாற்றில் பொருது வெற்றி வாகை சூடிய செய்தியினைக் கொண்டிலங்குகின்றன.

இவ்வெற்றியின் விளைவாகத் தெள்ளா றெறிந்த நந்திவர்மன் எனவும், திரிபுவனத்து இராஜாக்கள் தம்பிரான் எனவும் இவன் சிறப்புப் பெயர்கள் பெறலாயினான்.[11]

இந்த கல்வெட்டுக்கள் குந்துநாதர் கோயிலுக்கு இம்மன்னன் எத்தகைய சிறப்புச் செய்தான் என்பது கூறவில்லை. இவை கோபுரத்தின் உட்பகுதியில் மாற்றம் பெறாமல் இன்றளவும் இருப்பதிலிருந்து, இந்த கோயிலின் கருவறை, அர்த்த மண்டபம், முக மண்டபம் ஆகியவற்றை உள்ளடக்கிய திருச்சுற்று மதிலுடன் கூடிய கோபுரம் மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் நல்ல நிலையில் இருக்திருக்கிற தென்ப தனை நன்கு உணர முடிகிறது. இந்த மன்னனது தெள்ளாற்று வெற்றியினைத் திறம்படக் கல்வெட்டுக் கள் கூறுவதை நோக்குங்கால், அவ்வெற்றிக்குப் பின்னர் இவனே குந்துநாதர் கோயிலைக் கட்டு வதற்கு வழிகோலி யிருக்கக்கூடும் என்று எண்ணு வதில் தவறில்லை. இது எவ்வாறாயினும் இக்கோயி லின் தொன்மையினை அறிவுறுத்தும் சான்றுகளாக இக்கல்வெட்டுக்கள் திகழ்கின்றன.

கி. பி. 11 - ஆம் நூற்றாண்டில் குந்துநாதர் கோயில் புதுப் பொலிவு பெற்றதோடு, விரிவாக்கம் பெற்றிலங்கியும் இருந்திருக்கிறது. அப்போது இது வீரராஜேந்திரப் பெரும்பள்ளி எனப் பெயர் பூண்டிருந்திருக்கிறது. சோழ மன்னனாகிய வீர

ராஜேந்திரனின் ஐந்தாவது ஆட்சியாண்டில் (கி. பி. 1068) கரந்தை ஊர்ச்சபையைச் சார்ந்த மூன்று உறுப்பினர்கள் சில நிலங்களை விலைக்கு விற்று, அவற்றை வரி செலுத்தப்பட வேண்டாத இறையிலி நிலங்களாக ஆக்கி, குந்துநாதர் கோயிலுக்கு திருவிழாப் புறமாக வழங்கி யிருக்கின்றனர். இக்கோயிலில் நடைபெற்ற திருவிழாவிற்கான செலவுகளுக்காக வேண்டி இந்த நிலங்கள் அளிக்கப்பட்டதால் அவற்றைத் திருவிழாப்புறம் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. அக்காலத்தில் கரந்தை திருக்காமக்கோட்டம் என்னும் பேருருக்குட்பட்ட சிற்றூராகத் திகழ்ந்திருக்கிறது.[12]

முதற் குலோத்துங்க சோழனது நாற்பத்தைந்தாவது ஆட்சியாண்டில் (கி. பி. 1115) திருக்காட்டாம் பள்ளியாழ்வாராகிய மகாவீரர் கோயிலுக்குத் திருப்பறம்பூர் ஊர்ச் சபையினர் சில நிலங்களை விற்றுக் கொடுத்து, அவற்றைக் கோயிலுக்குரிய பள்ளி வளாகமாக மாற்றியிருக்கின்றனர். அக்காலத்தில் திருப்பறம்பூர் திருக்காமகோட்ட புரத்தைச் சார்ந்த சிற்றூர் எனவும், இது ஜெயங்கொண்ட சோழ மண்டலத்தில் காலியூர் கோட்டத்திற்குட்பட்ட காலியூர் நாட்டைச் சார்ந்திருந்த ஊர் எனவும் தெரிய வருகிறது.[13] குலோத்துங்கன் காலச் சாசனத்திலிருந்து கரந்தைக்குத் திருப்பறம்பூர் என்னும் பெயர் இருந்தமையும், அது திருக்காமக்கோட்ட புரத்தைச் சார்ந்த சிற்றூர் என்பதையும் அறிய வருகிறோம்.

கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் வீரராஜேந்திரப் பெரும்பள்ளியிலுள்ள அருக தேவருடைய திருவுருவத்தின் முன்பு ஒரு நந்தா விளக்கு எரிப்பதற்கெனத் திருப்பறம்பூர் வாசியான துகிலிக்கிழான் - அரையன் உடையான் என்பவர் சில ஆடுகளைத் தானமாகக் கொடுத்திருக்கிறார். அந்தக் காலத்திலும் திருப்பறம்பூர் காலியூர்க் கோட்டம், காலியூர் நாடு ஆகியவற்றிற்குட்பட்ட ஊராகவே இருந்து வந்திருக்கிறது.[14]

சோழ மன்னர்களுள் மூன்றாம் இராஜராஜன் காலத்தில் (கி. பி. 1216-1256) கரந்தைக் கோயிலுக்குப் பல்வேறு வகையான தானங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இம்மன்னனது பத்தாவது ஆட்சியாண்டில் (கி. பி. 1226) திருப்பறம்பூரிலுள்ள வீரராஜேந்திரப் பெரும்பள்ளியில் எழுந்தருளியுள்ள திருமேற்றிசைப் பெருமாள் திருவுருவத்தின் (பார்சுவநாதர்) முன்னர் நந்தா விளக்கொன்று எரியவிடுவதற்காக முன்னூறு காசுகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இந்த முன்னூறு காசுகளை இக்கோயிலைக் கண்காணித்து வந்த காணியாளன் பெற்றுக்கொண்டு, விளக்கிடும் பணியினைத் தவறாமல் செய்யவேண்டுமென ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. அக்காலத்தில் திருப்பறம்பூர் திருக்காமக்கோட்டம் எனப்பெயர் பெற்றிருந்தகாவும், இது வெண்குன்றக் கோட்டத்திலுள்ள இளங்காடு பிரிவில் இருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.[15]

முதற் குலோத்துங்கன் காலத்தில் திருப்பறம்பூர் திருக் காமக்கோட்ட புரத்திற்குட்பட்ட சிற்றூராகவும், காலியூர் நாடு. காலியூர்கோட்டம் ஆகிய ஆட்சிப்பிரிவு களுக்குட்பட்டதாகவும் இருந்திருக்கிறது. ஆனால் மூன்றாம் இராஜராஜனது ஆட்சிக்காலத்தில் இவ் வூருக்குத் திருக்காமக்கோட்டபுரம் என்றும் பெயர் வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் அப்போது இந்தஊர் வெண்குன்றக் கோட்டத்திற்குட்பட்ட இலங்காட்டுப் பிரிவிற்கு மாற்றப்பட்டிருக்கிறது. எனவே கரந்தை காலப்போக்கில்பேரூராக மாறியிருக்கவேண்டுமெனத் தோன்றுகிறது. பெரும்பாலும் ஆட்சி நிர்வாகத்திற் காக வேண்டி இவ்வூர் வந்தவாசியைச் சுற்றியுள்ள பகுதியாகிய வெண்குன்றக் கோட்டத்திற் குட்பட்ட இலங்காட்டுப் பிரிவிற்கு மாற்றப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. திருக்காமகோட்டபுரம் என்னும் ஊர் கரந் தைக்கும் மாமண்டூர் மலைக்கும் இடைப்பட்ட பகுதி யில் முன்பு இருந்ததாக கூறப்படுகிறது.[16] தற்போது இப்பெயரில் இங்கு ஊர் எதுவும் இருப்பதாகத் தெரிய வில்லை. கரந்தையிலுள்ள சோழர் காலச் சாசனங் களிலிருந்து இந்த ஊருக்குக் கரந்தை, திருப்பறம்பூர், திருக்காமக் கோட்டபுரம் என்னும் பெயர்கள் இருந் ததையும் அறிய வருகிறோம். ஆகவே அக்காலத்தில் கரந்தையும், திருப்பறம்பூரும் தற்போதிருப்பது போலத் தனித்தனி ஊர்களல்ல என்பதும் அறியற் பாலதாகும்.

மூன்றாவது இராஜராஜனது பத்தாவது ஆட்சி ஆண்டிலேயே [கி. பி. 1226] ஊற்றுக்கோடு என்னும் ஊரைச்சேர்ந்த வேளாளர் ஒருவர் குந்துநாதர் கோயில் தினமும் தவறாமல் நந்தாவிளக்கொன்று எரிய விடுவதற்காக சில பசுக்களைத் தானமாக அளித்திருக்கிறார்.[17] இந்த பசுக்களிலிருந்து பெறப்படும் நெய்யினைக் கொண்டு நந்தாவிளக்கு எரியவிடப்பட்டிருக்க வேண்டும். ஊற்றுக்காடு என்பது வாலாஜாபேட்டைக்கு அருகிலுள்ள ஊராகும்.

இராஜராஜனது பதினோராவது ஆட்சியாண்டில் (கி. பி. 1227ல்) அருள்மொழித் தேவபுரம் என்னும் நகரத்தைச் சார்ந்த வாணிபக் குழுவினர் வீரராஜேந்திரப்பெரும் பள்ளியில் அதிகாலையில் நடைபெறும் திருப்பள்ளி எழுச்சி (?) எனும் சடங்கின்போது தீபங்கள் ஏற்றப்படுவதற்காகத் தேவைப்படும் விளக்குகள் பலவற்றைக் கொடுத்திருக்கின்றனர். அருள்மொழித் தேவபுரம் பனையூர் நாட்டிற்கும் இராஜராஜ வளநாட்டிற்கும் உட்பட்டிருந்த நகரமாகும்.[18] இங்கு 'நகரத்தார்' எனப்படும் வாணிகக் குழுவினர் வசித்து வந்திருக் கின்றனர். இந்தக் குழுவைச்சார்ந்த சிலரே திருப்பறம்பூரிலுள்ள கோயிலுக்கு விளக்குகள் கொடுத்தவராவர். மூன்றாம் இராஜராஜனதுபதினெட்டாவது ஆண்டில் (கி. பி.1234) இக்கோயிலுக்கு இலங்காட்டைச் சார்ந்த திருநிலைக்கிழான் பூவன்மல்லன் என்பவர் ஏதோ ஒருநற்பணி செய்திருக்கிறார்.[19] இச்செய்தியைக் கூறும் சாசனம் மிகவும் சிதைந்து

உளதால் இது தொடர்பான விபரம் அறியும் வாய்ப்பில்லை.

சோழப் பேரரசிற்குட்பட்டு அரசோச்சிய காடவ சிற்றரசனாகிய கோப்பெருஞ்சிங்கனது காலத்திலும் (கி. பி. 1243-1279) இக்கோயில் சீரும், சிறப்பும் பெற்றிலங்கியிருக்கிறது. இச்சிற்றரசனது சிறப்பினைக் கூறும் கல்வெட்டுப் பாடல்கள் கோபுர வாயிலில் மேல் நிலையில் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இப்பாடல்கள் இவன் குந்துநாதர் கோயிலுக்கு தானங்கள் அளித்ததாகவோ அல்லது வேறுவகையில் உதவி புரிந்ததாகவோ கூறவில்லை யாயினும், இச்சிற்றரசனுக்கும், கோயிலுக்கும் ஏதோ ஒரு வகையில் தொடர்பு இருந்ததை அறிவுறுத்துபவையாக இருக்கின்றன.

சோழப் பேரரசர்களுக்கு அடங்கி தொண்டை நாட்டின் வட பகுதியை தெலுங்குச் சோழர் என்னும் பரம்பரையினர் ஆட்சி புரிந்து வந்திருக்கின்றனர். இவ்வழியில் தோன்றிய விஜய கண்ட கோபாலன் என்பவரது ஆட்சியிலும் (கி. பி. 1270) குந்துநாதர் கோயிலுக்குத் தானங்கள் வழங்கப் பட்டிருக்கின்றன. அப்போது பொன்னூரைச் சார்ந்த அருவந்தை ஆண்டாள், திருச்சோற்றுத் துறை உடையார் என்பவர்கள் கோயிலில் தினமும் ஆறு விளக்குகள் ஒரு ஜாமம் வரை எரியவிடும் வகையில் மூன்று பழவண்ணமாடை என்னும் நாணயங்களையும், சிறிது நெல்லையும் அளித்திருக்கின்றனர்.[21]

இவ்வாறு பல்வேறு வகையான அறக்கொடை

களைப் பெற்று சிறந்த முறையில் குந்துநாதர்கோயில் வளர்ச்சி பெற்று வந்திருக்கிறது. கி. பி. 5-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அரசியல் சூழ்நிலைகளினாலும், பொருளாதார நெருக்கடியினாலும் இந்து, புத்த, சமண சமயக் கோயில்கள் சிறிது நலிவுறத் தொடங்கியிருக்கின்றன. அப்போது அரசு புரிந்த நரசிம்மராயரின் கீழ் முகப் பாவாடை என்னும் அதிகாரியாகப் பணி புரிந்த ராமப்ப நாயக்கர், அரசு வருமானத்தை உயர்த்துவதற்காகப் பெருவாரியான கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து ஜோடி முதலிய பல வரிகளை வசூலிக்கத் தொடங்கியிருக்கிறார். இச்செயலினால் மிகுதியான கோயில்கள் மிகவும் பாதிப்பிற்குள்ளாகி, வழிபாடுகள் சரிவர நடத்தப்பெறாத நிலைக்குட்படுத்தப் பட்டிருக்கின்றன. பின்னர் கிருஷ்ணதேவராயர் விஜயநகர அரசின் வேந்தனாகப் பொறுப்பேற்ற பிறகு, கி.பி.1510-ம் ஆண்டில் படைவீடு, சந்திரகிரி இராஜ்ஜியப் பகுதிகளிலுள்ள அனைத்துக் கோயில்களுக்குச் சொந்தமான பள்ளிச்சந்தம், தேவதானம் ஆகிய நிலங்களை வரி செலுத்தப்பட வேண்டாத சர்வ மானியங்களாக ஆக்கும்படி ஆணை பிறப்பித்திருக்கிறார். இதனால் கரந்தையிலுள்ள வீரராஜேந்திரப் பெரும்பள்ளியும் பயன் பெற்று, அதற்குரிய நிலங்கள் சர்வ மானியங்களாக ஆக்கப்பட்டிருக்கின்றன.[22] இந்த நற்பணியினால் குந்துநாதர்கோயிலில் எவ்வித இடையூறுகளுமின்றி மீண்டும் வழிபாடுகள் நல்ல நிலையில் நடை

பெறுவதற்கு வழிவகை பிறந்திருக்கிற தென்பது அறியற்பாலதாகும்.

கி. பி. 1619 ஆம் ஆண்டில் விஜயநகர மன்னருக் குட்பட்ட மகா மண்டலேஸ்வரராகிய ராமதேவமகா ராயரின் பிரதிநிதியாகிய பாலநாயக்கர் என்பவரும், குந்துநாதர் கோயிலை நிர்வகித்து வந்த தானத் தாரும் கரந்தையிலுள்ள சில நிலங்களைச் சர்வமானிய மாகக் கயிலாயப்புலவர் என்னும் பேரறிவாளருக்கு வழங்கியிருக்கின்றனர்.[23] இந்தப் புலவரைப் பற்றிய பிறசெய்திகள் எவையும் நமக்குத் தெரியவரவில்லை. இவர் சமண சாத்திரங்களில் மிகுந்த புலமை பெற்ற வராக இருந்திருக்க வேண்டுமாதலால், கரந்தையில் சர்வமானியமாக நிலங்கள் வழங்கப் பட்டிருக்கின்றன என்பதில் ஐயமில்லை.

இக்கோயிலில் நிறுவப் பெற்றிருக்கும் பீடமொன் றில் கி. பி. 19 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சாசனம் ஒன்று இடம் பெற்றுள்ளது. சித்தர்களுக்கு வணக்கம் செலுத்தும் வகையில் பொறிக்கப்பட்டுள்ள இக்கல் வெட்டு, அறநெறியின்பாற் பட்டொழுகும் தவநெறி யாளர்கள் எப்போதும் சைனமந்திரத்தினை உச்சரித் துக்கொண்டே இருப்பார்கள் எனப்புகழாரம் சூட்டு வதாக அமைந்துள்ளது.

## குந்துநாதர் கோயில் பற்றிய பாடல்கள்

கரந்தையிலுள்ள திருக்கோயில் புகழ்பெற்று விளங்கியதால், இங்குறையும் குந்துநாதர் தீர்த்தங்

கரைப் பற்றியும் பல பாடல்கள் பாடப்பெற்றிருக்கின்றன. சமஸ்கிருத மொழியில் முனிகிரிஜினாலயத்துறையும் குந்துநாதரின் மீது பன்னிரெண்டு தோத்திரங்கள் உள்ளன. இத்தொகுப்பு **'குந்துநாத அஷ்டகம்'** என அழைக்கப் பெறும். ஓலைச்சுவடிகளில் எழுதப்பெற்றிருந்த இத்தோத்திரங்கள் அண்மைக் காலத்தில் புத்தக வடிவில் அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த குந்துநாத அஷ்டகம் எப்போது, யாரால் இயற்றப்பெற்ற தென்பதனை வரையறை செய்வதற்கில்லை. இதனைப்போன்று தமிழ் மொழியில் பாடப்பெற்ற பாடல்கள்பலவும் ஏட்டுச்சுவடியில் இருந்திருக்கின்றன. இவற்றுள் திருப்பறம்பூர் தருமதேவியம்மன் பேரில் கலித்துறைப் பாடல்களும், தருமதேவதைப் பத்து என்னும் பாடற் தொகுப்பும் குறிப்பிடத் தக்கவை யாகும். கரந்தையில் எழில் கோலம்கொண்டிருக்கும் தருமதேவி யன்னையின் அருட்செயல்களைப் போற்றிப் பரவும் இப்பாடல்களையும், பிற தலங்களிலுள்ள தீர்த்தங்கரர்கள் மீது பாடப் பெற்றவற்றையும் தொகுத்து 'தோத்திரத் திரட்டு' என்னும் பாமாலையாகப் படைத்திருக்கின்றனர். இவற்றின் காலத்தினையும் உறுதியாக வரையறை செய்வதற்கில்லையெனினும், இவை கி. பி. 16, 17-ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்ததாக இருக்கக் கூடுமெனக் கருதப்படுகிறது.

# மேற்கோள்கள்


1 Annual Report on Epigraphy (ARE), 141/1939-40

2 ARE, 135 / 1939-40

3 ARE, 140, 142 / 1939-40

4 ARE, 136 / 1939-40

5 முனிகிரி ஸ்ரீ குந்து நாதாஷ்டகம், பக். 6

6 Mackenzie Manuscripts, No. 14, Sec. 3

7 தோத்திரத் திரட்டு, பக். 64, பா. 6

8 ARE, 145 / 1939-40

9 ARE, 98 / 1923

10 ARE, 134/1939-40

11 ARE, 140, 142 / 1939-40

12 ARE, 129 / 1939-40

13 ARE, 135 / 1939-40

14 ARE, 130 / 1939-40

15 ARE, 141 / 1939-40

16 முனிகிரி ஸ்ரீ குந்து நாதாஷ்டகம், பக். 18

17 ARE, 132 / 1939-40

18 ARE, 131 / 1939-40

19 ARE, 139 / 1939-40

20 ARE, 143 / 1939-40

21 ARE, 138 / 1939-40

22 ARE, 144 / 1939-40

23 ARE, 137 / 1939-40

24 ARE, 133 / 1939-40

# புஷ்பதந்தர் கோயில்

கரந்தையின் வடபகுதியாகத் திகழும் திருப்பறம்பூரில் புஷ்பதந்த தீர்த்தங்கரருக்கென்று தனிக் கோயில் எழுப்பப்பட்டிருப்பதைக் காணலாம். கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், முகமண்டபம், மானஸ்தம்பம், பலிபீடம், திருச்சுற்றுமதில் ஆகிய பகுதிகளைக் கொண்டதாகும். கருங்கல்லால் கட்டப்பெற்ற இந்த திருக்கோயிலின் அடித்தளமானது தாமரை இதழ்கள் செதுக்கப்பட்ட உபானம், ஜகதி, தாமரை இதழ்களைக் கொண்ட முப்படைக் குமுதம், கண்டரம், கம்பம், மகபாட்டிகை, வாஜனம் முதலிய உறுப்புக்களை யுடையதாக அமைக்கப்பட்டிருக்கிறது. கருவறை, மண்டபங்கள் ஆகியவற்றின் புறச்சுவர்களில் அரைத்தூண்கள், கும்ப பஞ்சரங்கள், தேவகோட்டங்கள் ஆகியவை அழகுறப் படைக்கப் பட்டிருக்கின்றன. அரைத்தூண்கள் கால், கலசம், கும்பம், கண்டம், பூமுனை அமைப்புடைய போதிகை ஆகியவற்றை உடையனவாகத் திகழ்கின்றன. தேவகோட்டங்களில் தற்போது சிற்பங்கள் எவையும் காணப்படவில்லை. இந்த தேவ கோட்டங்களின் மேற்பகுதியில் ''சாலை" எனப்படும் நீள்சதுரவடிவக் கோயில் அமைப்புகள் உள்ளன. வெளிச்சுவர்களை அலங்கரிக்கும் கும்ப பஞ்சரங்கள் அலங்கார செதுக்கு

வேலைப்பாடுகளை உடையனவாய் திகழ்கின்றன. அழகுமிக்க கும்பத்தினின்று வெளிப்படும் உருண்டை வடிவத்தூண்கள் சிறியசெதுக்கு வேலைபாடுகளுடன், மேற்பகுதியில் "கூடம்" என்னும் சதுரவடிவக்கோயில் அமைப்பினைப் பெற்றிருப்பதைக் காணலாம். இந்த தூண்களின் அடிப்பகுதியில் சிங்கமுக அலங்காரங்கள் சிறப்புற சமைக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய கலையம்சங்கள் அனைத்தும் கி.பி. 15-ஆம் நூற்றாண்டிற் குரியவையாகும்.

அர்த்தமண்டபத்தில் தூண்கள் எவையும் நிறுவப்படவில்லை. மகா மண்டபத்திலுள்ள தூண்கள் உருண்டை வடிவமாகவும், அவற்றின்மேல் நீள் சதுரப் போதிகைகளையும் பெற்றிலங்குகின்றன. கி. பி. 15-ம் நூற்றாண்டில் இந்த கோயில் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகிய பகுதிகளை மட்டும் கொண்டிருந்தது. பின்னர் கி. பி. 19-ம் நூற்றாண்டில் இதனுடன் முகமண்டபம் ஒன்று புதியதாகக் கட்டப்பட்டிருக்கிறது. இக்கோயில் காலப்போக்கில் கண்காணிப்பின்றி இருந்தமையால் 1979-ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. அப்போது மகா மண்டபத்தின் சுவர்களும் சீர் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தக் கோயிலின் விமானம் முன்பு ஒரு தளமுடையதாக இருந்திருக்கிறது. இதுவும் பழுது அடைந்தமையால் 1979-ஆம் ஆண்டு முற்றிலுமாகப் புதுப்பிக்கப்பட்டு நன்னிலைக்குக் கொணரப்பட்டிருக்கிறது.

முகமண்டபத்திற்கு அடுத்தாற்போன்று நிறுவப் பட்டுள்ள ஒற்றைக் கல்லினாலான மானஸ்தம்பம் ஒரு குறிப்பிட்ட பகுதி வரை சதுர, உருண்டையான, பட்டை தீட்டப்பெற்ற வடிவ அமைப்புகளைக் கொண் டிலங்குகிறது. இதன் உச்சிப் பகுதியில் சிறிய சதுர வடிவக் கோயில் (விமானம்) அமைப்பு சிறப்புற செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இந்த மான ஸ்தம்பம் இருபதாம் நூற்றாண்டில் நிறுவப்பட்டதே யன்றி, கோயில் தோற்றுவிக்கப்பட்டபோது நிறுவப் பட்டதல்ல.

## மூன்று துறவியர்

மானஸ்தம்பத்திற்குத் தென்புறத்தில் அண்மைக் காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட மண்டபம் ஒன்று உள்ளது. இதன் நடுப் பகுதியில் நிறுவப்பட்டுள்ள பீடங்களில் மூன்று அறவோர்களது திருவடிகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இவை திருப்பறம்பூரைச் சார்ந்த தர்மசாகர், சுதர்மசாகர், கஜபதி சாகர் என்னும் சான்றோர்களது திருவடிகளைக் குறிப்பவை யாகும். இப்பீடங்களின் அடிப்பகுதியில் இந்த பெருந்தகை யோர்களது பெயர்கள், இவர்கள் அவதரித்த விண் ணுலகமடைந்த தியதி, மாதம், ஆண்டு ஆகியவை பொறிக்கப்பட்டிருக்கின்றன. 18‾0-ஆம் ஆண்டு அவ தரித்த தர்மசாகர் சமண நெறி வழுவாமல் வாழ்ந்து துறவறம் மேற்கொண்டு, பின்னர் சிரவணபெலகோ லாவில் 1940-ம் ஆண்டு உயிர் நீத்திருக்கிறார். இப்

பெரியோரது மைந்தராகிய சுதர்மசாகர் 1902-ஆம் ஆண்டு அவதரித்தவராவர். இவரும் தமது தந்தையாரைப் போன்று அருகன் அருள்நெறி போற்றி வந்தவராவார். தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்த இவர் சமண சாஸ்திரங்களைக் கற்றறிந்த பெற்றியுடையவராவார். துறவு நெறி பூண்டொழுகிய இந்த பேரறிவாளர் 1973ஆம் ஆண்டு மகாராட்டிர மாநிலத்திலுள்ள கஜபந்தா என்னும் தலத்தில் விண்ணுலகமடைந்ததாகத் தெரிகிறது. இந்த இரண்டு அறநெறியார்களின் சமயத் தொண்டினையும், சல்லேகனை பூண்ட பெருமையினையும் நினைவு கூரும் வகையில் இங்குள்ள கோயிலில் அவர்களது திருவடிகள் நிறுவப்பட்டிருக்கின்றன.

இத்திருப்பறம்பூரில் பிறந்து ஜைன சித்தாந்தங்களை ஆழப் பயின்று தத்துவக் கடல் எனப் புகழ்ப் பெற்றவர் கஜபதி ஜைன். அவர் கஜபதி சாகர் என திருப்பெயர் கொண்டு முனி விரதம் ஏற்று 3–11–88ல் சமாதிமரணம் - சல்லேகனை மரணம் அடைந்தார். அவர் நினைவாகவும் இத்திருவடிகளுக்கு அருகில் அவர் திருவடியும் வடிக்கப்பட்டுள்ளது.

புஷ்பதந்தர் கோயிலை உள்ளடக்கியவாறு கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் திருச்சுற்று மதிலும், அதன் கிழக்குப் பகுதியில் கோபுரமும் கட்டப்பட்டிருந்திருக்கின்றன. அப்போது திருமதிலின் உயரம் குறைந்த

தாகவே இருந்திருக்கிறது. கோபுரம் மூன்று தளங்களைக் கொண்டு விளங்கியதாகவும் கூறப்படுகிறது. ஆனால் பிற்காலத்தில் திருச்சுற்று மதிலின் உயரம் அதிகரிக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் புதுப்பிக்கப் படவும் செய்திருக்கிறது. அச்சமயத்தில் கோபுரத்தின் தளங்கள் மிகவும் சீர்கெட்டிருந்ததால், அவற்றை அகற்றிவிட்டு நுழைவாயில் மட்டும் உடையதாக ஆக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய திருப்பணிகள் அண்மைக் காலத்தில் நிறைவேற்றப்பட்டதாக அறிய வருகிறோம்.

**சிற்பங்கள்**

திருப்பறம்பூர் கோயிலின் கருவறையில் புஷ்ப தந்த தீர்த்தங்கரரது சிற்பம் தியானக் கோலத்தில் இடம் பெற்றிருக்கிறது. கல் சிற்பமாகிய இதன்மீது சமீப காலத்தில் சுதை பூசி, வெள்ளை நிற வண்ணமும் தீட்டப்பெற்றிருப்பதைக் காணலாம். முன்பு கருவறையில் இருந்த திருவுரும் சிறிது குறைந்த தால், அதனை அகற்றிவிட்டு இந்த திருவுருவத்தைப் பிரதிட்டை செய்ததாகக் கூறப்படுகிறது. முன்பு மூலவ ராகத் திகழ்ந்த சிற்பம் தற்போது நுழைவாயிலுக்கு அருகில் வழிபாடற்ற நிலையில் உள்ளது. இதன் மூக்குப் பகுதி உடைந்து காணப்படுகிறது. சிம்மா சனத்தில் வீற்றிருக்கும் புஷ்பதந்தரின் தலைக்குப் பின்புறம் அரை வட்ட வடிவ அலங்கார பிரபையும், அதற்குமேல் முக்குடையும், கொடியமைப்பும் செதுக்

கப்பட்டிருக்கின்றன. இந்தச் சிற்பம் கி பி. 15-ஆம் நூற்றாண்டுக் கலைப்பாணியைக் கொண்டிலங்குகிறது.

அர்த்த மண்டபத்தினுள் பிரம்மதேவர், பார்சுவநாதர், தருமதேவி ஆகியோரது சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பிரமதேவர் பீடமொன்றில் அமர்ந்தவாறு காணப்படுகிறார். இவரது வலது கால் யானைவாகனத்தின் மீது ஊன்றியவாறும், இடதுகால் பீடத்தில் மடக்கிவைத்தவாறும் உள்ளன. இத்தேவரது வலதுகை லாக்குடம் என்னும் வளைந்த கோலினைப் பெற்றும், இடது கை சின் முத்திரையைக் குறித்தும் உள்ளன. இத்திருவுருவம் கி. பி. 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். இந்த சிற்பம் புஷ்பதந்தர் கோயிலைச் சேர்ந்ததல்ல. கரந்தை குந்துநாதர் கோயிலில் காணப்பட்ட இதனை அண்மைக் காலத்தில் இங்கு கொண்டுவந்து நிறுவியதாகக் கூறப்படுகிறது. இந்தச் சிற்பத்தைத் தவிர எஞ்சியுள்ள திருவுருவங்கள் அனைத்தும் தற்காலத்தைச் சார்ந்தவையாகும். இவற்றைப்போன்று இங்குள்ள தீர்த்தங்கரர்,யக்ஷன்,யக்ஷி ஆகியோரைக்குறிக்கும் உலோகத் திருவுருவங்களும் பழமை வாய்ந்தவையல்ல. கி. பி. 15 ஆம் நூற்றாண்டிலேயே இந்தக் கோயில் தோற்றுவிக்கப்பட்டிருந்த போதிலும், இதன் எந்தபகுதியிலும் கல்வெட்டுகள் பொறிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# கல்வெட்டுக்கள்

குந்து நாதர் கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள் படிஎடுக்கப்பட்டு பலஆண்டுகள் ஆனபோதிலும், அவற்றின் வாசகங்கள் இன்னமும் வெளியிடப் பெற வில்லை. எனவே கல்வெட்டாண்டறிக்கையில் காணப் படும் செய்தியினைத் தமிழாக்கம் செய்து இங்கே தரப்படுகிறது. குறிப்புகள் புத்தக ஆசிரியரின் கருத்துக்களாகும்.

## எண் 1

**இடம்** : குந்துநாதர் கோயில் கோபுரத்தின் உட் பகுதியில் வலதுபக்கமாகப் பொறிக்கப் பட்டுள்ள கல்வெட்டு.

**அரசன்** : பல்லவமன்னன் மூன்றாம் நந்திவர்மன்.

**ஆண்டு** : (கி. பி. 846-869).

**மொழி** : தமிழ்

**செய்தி** : தெள்ளாறில் பொருது வெற்றி பெற்றது மட்டுமின்றி வளவனாகிய சோழமன்னனைச் சிறைப்பிடித்த சிறப்புடைய பல்லவர் கோனைப் புகழ்ந்து பாடப்பெறும் மூன்று பாடல்களாகும்.

**மேற்கோள்** ARE, 140 / 1939-40

## எண் 2

இடம் : கோபுரத்தின் உட்பகுதியில் இடதுபுறமாகப் பொறிக்கப்பட்டுள்ளது.

அரசன் : பல்லவமன்னன் மூன்றாம் நந்திவர்மன்.

ஆண்டு : (கி. பி. 846-869).

மொழி : தமிழ்

செய்தி : திரிபுவனத்து ராஜாக்கள் தம்பிரானாகிய பல்லவர்கோன் சோழமன்னனை வெற்றி பெற்றமையால் புகழ்ந்து பாடப்பெற்ற பாடல்.

மேற்கோள் : ARE, 142 / 1939-40

குறிப்பு : மேற்கூறப்பட்டுள்ள இரண்டு கல்வெட்டுக் களும் மூன்றாம் நந்திவர்மபல்லவன் சோழ அரசனைத் தெள்ளாறில் வெற்றி வாகை சூடிய செய்தியைக் கொண்டு விளங்கு கின்றன. ஆனால் இம்மன்னன் குந்துநாதர் கோயிலுக்கு எவ்வகையில் துணைபுரிந் தான் என்பது பற்றிக் கூறவில்லை.

## எண் 3

இடம் : குந்துநாதர் கோயில் கருவறையின் அடித் தளப் பகுதி.

அரசன் : சோழன், ராஜகேசரி வர்மனாகிய வீர ராஜேந்திரன்.

ஆண்டு : 5-ம் ஆட்சியாண்டு (கி. பி. 1068).

மொழி : தமிழ்.

செய்தி : இது ஒரு நிலத்தை ஊர்ச் சபையைச்சார்ந்த மூன்று உறுப்பினர்கள் வரி செலுத்தப்பட வேண்டாத இறையிலி நிலமாக ஆக்கி, அதனை திருவிழாப் புறமாக கரந்தையில் யில் உள்ள சைனக் கோயிலுக்கு விலைக் குக் கொடுத்ததைக் கூறுகிறது. இதில் திருக்காமக்கோட்ட புரத்தைச் சார்ந்த சிற்றூர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கோள்: 12 ARE, 129 / 1939-40

குறிப்பு : திருவிழாப்புறம் என்பது கோயிலில் நடை பெறும் திருவிழாக்களின்போது ஏற்படுகிற செலவிற்கென அளிக்கப்படும் தானமாகும்.

## எண் 4

இடம் : வர்த்தமான மகாவீரர் கருவறையின் அடித் தளப் பகுதியில் மேற்கிலும், தெற்கிலும் பொறிக்கப்பட்டுள்ளது.

அரசன் : முதலாம் குலோத்துங்க சோழன்.

ஆண்டு : 45-ஆம் ஆட்சியாண்டு (கி. பி. 1115).

மொழி : தமிழ்.

செதி : திருப்பறம்பூரிலுள்ள ஊர்ச்சபை சில நிலங்களைத் திருக்காட்டாம்பள்ளி யாழ்வார் கோயிலுக்கு பள்ளி விளாகமாக விற்றுக் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது. மேலும் திருப்பறம்பூர், ஜெயங்கொண்ட சோழமண்டலத்தின் உட்பிரிவாகிய காலியூர் கோட்டத்திற்கும் அதற்குட்பட்ட காலியூர் நாட்டிற்கும் உள்ளடங்கிய திருக்காமகோட்ட புரத்தைச் சார்ந்த ஊர் எனவும் கூறப்பட்டுள்ளது.

மேற்கோள்: ARE, 135 / 1939-40

குறிப்பு : திருப்பறம்பூருக்கு அக்காலத்தில் தனியாக ஊர்ச்சபை ஒன்றிருந்திருக்கிறது. இவ்வூரின் நிர்வாகத்தினை அச்சபை கவனித்து வந்திருக்கிறது. வர்த்தமானருக்கெனத் தோற்றுவிக்கப்பட்ட கோயில் திருக்காட்டாம்பள்ளி ஆழ்வார் கோயில் என அழைக்கப் பெற்றிருக்கிறது.

## எண் 5

இடம் : குந்துநாதர் கோயில் கோபுரத்தின் உட்புறச் சுவரில் வலது பக்கமாக எழுதப்பெற்றுள்ளது.

அரசன் : சோழன், இராஜராஜ தேவன்.

ஆண்டு : 10-ஆம் ஆட்சியாண்டு (கி. பி. 1226).

மொழி : தமிழ்.

செய்தி : வீரராஜேந்திர பள்ளியாகிய இக்கோயிலில் உள்ள திருமேற்றிசைப் பெருமாள் திருவுருவத்திற்கு முன்பாக ஒரு நந்தாவிளக்கு எரியவிடுவதற்காக, இக்கோயிலில் பணி புரிந்த காணியாளன் 300 காசுகளைப் பெற்றுக் கொண்டு இந்த நிவந்தத்தை தவறாமல் நடத்தி வருவேன் என ஒப்புதல் அளித்ததைக் கூறுவதாகும். மேலும் திருக்காமகோட்டபுரமாகிய திருப்பறம்பூர் வெண்குன்றக் கோட்டத்தைச் சார்ந்த இலங்காட்டிற்கு உட்பட்ட ஊர் எனவும் குறிப்பிடப்பட்டு உள்ளது.

மேற்கோள்: ARE, 141 / 1939-40

குறிப்பு : இக்கல்வெட்டில் குந்துநாதர் கோயில் வீரராஜேந்திர பெரும்பள்ளி எனச் சோழ மன்னனது பெயரைப் பெற்றிலங்குகிறது. அக்காலத்தில் திருப்பறம்பூரும் திருக்காமக் கோட்டபுரமும் ஒன்றாக இணைக்கப்பட்டு இலங்காடு நாட்டிற்குட்பட்ட ஊராக ஆக்கப் பட்டிருக்கிறது. வந்தவாசிக்கு அண்மையில் உள்ளவை வெண்குன்றமும், இலங்காடும் ஆகும். இக்கல்வெட்டு மிக்கவாறும் மூன்றாவது ராஜராஜ சோழனது காலத்தில் பொறிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

## எண் 6

**இடம்** : குந்துநாதர் கோயிலின் முன் மண்டபத்தை ஒட்டிய படிக்கட்டுகளை இணைத்தவாறு உள்ள பக்கவாட்டுக் கற்கள்.

**அரசன்** : சோழன், இராஜராஜன்.

**ஆண்டு** : 10-ஆம் ஆட்சியாண்டு (கி. பி. 1226).

**மொழி** : தமிழ்.

**செய்தி** : ஜெயங்கொண்ட சோழ மண்டலத்திற்குட் பட்ட ஊற்றுக்காட்டுக் கோட்டத்தைச் சார்ந்த ஊற்றுக்காடு என்னும் ஊரில் வாழ்ந்த வெள்ளாளர் ஒருவர் திருப்பரம் பூரிலுள்ள ஜைனக்கோயிலில் நந்தா விளக் கொன்று எரியவிடும் பொருட்டு சில பசுக் களைத் தானம் செய்த விபரத்தைக் கொண் டிலங்குகிறது.

**மேற்கோள்** : ARE, 132 / 1939-40

## எண் 7

**இடம்** : குந்துநாதர் கோயில் முகமண்டபத்தின் படிக்கட்டுகளை ஒட்டியவாறு உள்ள கற்களில் எழுதப்பட்டிருப்பது.

**அரசன்** : சோழன், இராஜராஜதேவன்.

ஆண்டு : 11-ஆம் ஆட்சியாண்டு (கி. பி. 1227)

மொழி : தமிழ்.

செய்தி : திருப்பறம்பூரிலுள்ள வீர ராஜேந்திரப் பெரும்பள்ளி என்னும் ஜைனக்கோயிலில் திருப்பள்ளி யெழுச்சி சடங்கின்போது தீபங்கள் ஏற்றிவைப்பதற்கென அருமொழி தேவபுரத்தைச் சார்ந்த நகரத்தவர்கள் கொடுத்த விளக்குகளைப்பற்றிக் குறிப்பிடு கிறது. இந்த அருள்மொழிதேவபுரம் ராஜ ராஜவளநாட்டிற்கும், பளையூர் நாட்டுற்கும், உட்பட்ட ஒரு நகரமாகும்.

மேற்கோள்: ARE, 131 / 1939-40

குறிப்பு : திருப்பள்ளி எழுச்சி என்னும் சடங்கு காலை யில் இறைவனைத் துயிலெழுப்புவதாகக் கருதி நிகழ்த்தப் பெறுவதாகும்.

## எண் 8

இடம் : குந்துநாதர் கோயில் கோபுரத்தை ஒட்டி யுள்ள பிரகாரச் சுவரின் மேற்குப்புறம்.

அரசன் : சோழன் ராஜராஜதேவன்.

ஆண்டு : 18-ஆம் ஆட்சியாண்டு (கி. பி, 1234).

செய்தி : சிதைந்துள்ள சாசனம். இலங்காட்டைச் சார்ந்த திருநிலைக்கிழான் மல்லன் பூவன் என்னும் பெயரைக் குறிப்பிடுகிறது.

மேற்கோள்: ARE, 139 / 1939-40

## எண் 9

இடம் : குந்துநாதர் கோயில் கருவறையின் அடித் தளப்பகுதியில் எழுதப்பட்டுள்ளது.

அரசன் : —

ஆண்டு : (13-ஆம் நூற்றாண்டு)

மொழி : தமிழ்.

செய்தி தொடக்கப்பகுதி சிதைந்துள்ளது. வீர ராஜேந்திர பெரும்பள்ளியாழ்வார் கோயிலி லுள்ள அருகதேவர் முன்பு நந்தா விளக் கொன்று எரிய விடுவதற்காக ஆடுகள் தானம் செய்தது பற்றிக் கூறுகிறது. இந்த தானத்தைக் காலியூர்க் கோட்டத்திற் குட்பட்ட காலியூர் நாட்டைச்சார்ந்தஊராகிய பறம்பூர் வாசியாகிய துகிலிகிழான் அரையன் உடையான் என்பவர் செய்துள்ளார்.

மேற்கோள் : ARE, 130 / 1939-40

## எண் 10

இடம் : குந்துநாதர் கோயிலின் கோபுரத்திலுள்ள நுழைவாயில் சட்டத்தில் எழுதப்பட்டுள்ளது.

அரசன் : பல்லவன், கோப்பெருஞ்சிங்கன்.

ஆண்டு : (கி. பி. 1243—1279)

மொழி : தமிழ்.

செய்தி : கோப்பெருஞ்சிங்க மன்னனது பெருமையினைப் புகழ்ந்து பாடும் மூன்று பாடல்கள்.

மேற்கோள் : ARE, 143 / 1939-40

## எண் 11

இடம் : குந்துநாதர் கோயிலின் மேற்குப் பிரகாரச் சுவர்.

அரசன் : தெலுங்கு சோழன் விஜயகண்டகோபாலன்:

ஆண்டு : 20-ஆம் ஆட்சியாண்டு (கி. பி. 1270).

மொழி : தமிழ்.

செய்தி : பொன்னூரைச் சார்ந்தவராகிய அருவந்தை ஆண்டாள், திருச்சோற்றுத்துறைஉடையார் என்பவர்கள் இக்கோயிலில் ஆறுவிளக்குகள் ஒரு சாமம் வரையிலும் எரியவிடவேண்டுமென்பதற்காக மூன்று பழவண்ணமாடை என்னும் நாணயங்களையும். குறிப்பிட்ட அளவு நெல்லையும் வழங்கியுள்ளார்கள்.

மேற்கோள் ARE, 138 / 1939-40

## எண் 12

**இடம்** : குந்து நாதர் கோயிலின் முன் பகுதியில் நிறுவப்பட்டிருந்த கற்பலகையில் பொறிக்கப்பட்டது.

**அரசன்** : விஜயநகர அரசன் கிருஷ்ணதேவராயர்.

**ஆண்டு** : சக 1431 (கி. பி. 1510).

**மொழி** : தமிழ்.

**செய்தி** : நரசிம்ம தேவ மகாராயரின் கீழ் முகப்பாவாடை என்னும் அதிகாரியாகப் பணிபுரிந்த ராமப்பநாயக்கர் என்பவர் கோயில் நிலங்களின் மீது ஜோடி போன்ற வரிகளை வசூலித்ததால் பலகோயில்கள் பாதிக்கப்படலாயின. ஆனால் கிருஷ்ண தேவராயர் பட்டமேற்றவுடன் படைவீடு, சந்திரகிரி ஆகிய ராஜ்யங்களிலுள்ள ஜைன, புத்தமதக் கோயில்கள் மட்டுமின்றி, பிற கோயில்களுக்குரிய தேவதான நிலங்கள் அனைத்தையும் வரிசெலுத்தப்பட வேண்டாத சர்வமானியமாக ஆக்கினார். இவ்வாறு செய்ததினால் கரந்தையிலுள்ள வீரராஜேந்திரப் பெரும்பள்ளியும் பயன் பெற்றது.

**மேற்கோள்**: ARE, 144 / 1939-40

## எண் 13

இடம் : குந்துநாதர் கோயில் கோபுரத்திற்கு அருகில் நிறுவப்பட்டிருந்த, இரண்டு திருவடிகள் பொறிக்கப்பட்டிருந்த கற்பலகையில் எழுதப் பட்டது.

அரசன் : —

ஆண்டு : கி. பி. 16-ஆம் நூற்றாண்டு.

மொழி : சமஸ்கிருதம், கிரந்தவரிவடிவம்

செய்தி : புஷ்பசேன யோகிந்திரரின் இதயத் தாமரைக்குச் சூரியனாகத் திகழும் சமந்திர பத்திர முனிவரின் அழியாப்புகழை வாழ்த் தும் பாடல்.

மேற்கோள் : ARE, 145 / 1939-40

குறிப்பு : கற்பலகையில் பொறிக்கப்பட்டுள்ள பாதங் கள் புஷ்பசேனயோகிந்திரரின் குருவாகிய சமந்திரபத்திர முனிவரின் திருவடிகளைக் குறிப்பவையாகும்.

## எண் 14

இடம் : கோபுரத்தை ஒட்டியுள்ள பிரகாரச் சுவரில் பதிக்கப்பட்டுள்ள கல்லில் காணப்படுவது

அரசர் : விஜயநகர அரசர். இராமதேவமகாராயர்.

ஆண்டு : சக 1541 (கி. பி. 1619)

மொழி : தமிழ்.

செய்தி: : கல்வெட்டு முழுமையாக இல்லை. கரந்தையிலுள்ள சில நிலங்களை பாலநாகம நாயக்கரும், தானத்தாரும் கயிலாய புலவர் என்பவருக்குச் சர்வ மானியமாகக் கொடுத்தது பற்றிக் கூறுகிறது

மேற்கோள்: ARE, 137 / 1939-40

குறிப்பு : கயிலாய புலவர் என்பவர் கரந்தையைச் சார்ந்த சைனப் புலவராக இருக்கலாம். இவரைப்பற்றிய விபரங்கள் அறிவதற்கு இல்லை.

## எண் 15

இடம் : தருமதேவி கருவறையின் அடித்தளத்தில் கிழக்குப் பக்கம் எழுதப்பெற்றுள்ளது.

அரசன் : —

ஆண்டு : சக 1669 (கி. பி. 1747)

மொழி : தமிழ்.

செய்தி : முனிகிரியிலுள்ள குந்துநாத சுவாமி - தேவராஜ சுவாமி கோயிலின் கோபுரமானது சுண்ணச் சாந்தினால் (சுதை) அகஸ்தியப்ப நயினார் என்பவரால் புதுப்பிக்கப்பட்டது.

மேற்கோள்: ARE, 136 / 1939-40

குறிப்பு : குந்துநாதர் கோயிலின் கோபுரம் 1747-ஆம் ஆண்டு அகஸ்தியப்ப நயினார் என்பவரது அரும் முயற்சியினால் புதுக்கப்பட்டிருக்கிறது. இக்கல்வெட்டில் கரந்தை முனிகிரி என்னும் பெயரினைக் கொண்டுள்ளது.

## எண் 16

இடம் : குந்துநாதர் கோயில் மண்டபத்தினுள் வைக்கப்பட்டிருக்கும் பாதங்கள் பொறிக்கப் பட்ட கல்.

அரசன் : —

ஆண்டு : —

மொழி : சமஸ்கிருதம், கிரந்த வரிவடிவம்.

செய்தி : ஸ்ரீமான் முனிபத்திரசுவாமிகள் என்ற பெயர் எழுதப் பட்டுள்ளது.

மேற்கோள் : ARE, 134/1939-40

குறிப்பு : இந்தப் பாதங்கள் ஸ்ரீமான் முனிபத்திர சுவாமிகளுடையவை என்பது பொருளாகும்.

## எண் 17

இடம் : குந்துநாதர் கோயில் மண்டபத்தினுள் வைக்கப்பட்டிருந்த கற்பலகையில் எழுதப் பெற்றது.

அரசன் : —

ஆண்டு : (19 ஆம் நூற்றாண்டு)

மொழி : தமிழ்

செய்தி : எப்போதும் சில மந்திரங்களை தவறாமல் உச்சரித்துக் கொண்டிருக்கும் மாண்பினை பெற்றவர்கள் சித்தர்களாவார்கள்.

மேற்கோள்: ARE, 133/1939-40.

## எண் 18

இடம் : வட ஆர்க்காடு மாவட்டம், வாலாஜா பேட்டை தாலுகாவைச்சார்ந்த சக்கரமல்லூரிலுள்ள சிவன் கோயிலில் காணப்படும் சாசனம்.

அரசன் : —

ஆண்டு : சக 1683 (கி. பி. 1761)

மொழி : தமிழ்.

செய்தி : இக் கல்வெட்டு சக்கர மூதுரைச் சார்ந்த முதலிமார்கள் ஒரு நிலத்தை திருப்பறம்பூர் ஜைனர்களான புஷ்பநாத நயினாருக்கும், அகஸ்தியப்ப நயினாருக்கும் நானூற்று ஐந்து சென்னப் படினவராகனுக்கு விற்றுக் கொடுத்தாரைக் கூறுகிறது.

மேற்கோள்: ARE, 25/1940-41,

குறிப்பு : இந்த சாசனம் சிவன் கோயிலுக்குரியதாயினும், இதில் திருப்பறம்பூறைச் சார்ந்த இரு சமணர்களது பெயர்கள் இடம் பெறுகின்றன. இக்கல்வெட்டு கூறும் அகஸ்தியப்ப நயினாரும், கரந்தைக் கோயிலின் கோபுரத்தை கி. பி. 1747 ஆம் ஆண்டு புதுப்பித்த அகஸ்தியப்ப நயினாரும் ஒருவராக இருந்தாலும் இருக்கலாம்.

---

# திருமேற்றிசைப் பத்து

பொன்னுந் திருந்து மணியும் பொழிந்து
புகழ்கின்ற தேவர் பொலியப்
பன்னுங் கணங்கள் பலகோடி கொண்டி
பணிமா மலர்க்கண் வருமால்
மின்னுங் குணங்கள் வெயிலுந் துணங்க
மிளிர்கின்ற மாட மருகில்
மன்னும் பறம்பை மணிகோயின் மேலை
வளர்கின்ற பச்சை மலையே. 1

வெல்கின்ற தியான முனைவாள் பிடித்து
வினைவா யடக்கு மிசையே
செல்கின்ற குன்ற மெனமன்ற மல்கும்
செழுமா மலர்க்கண் வருமால்
ஒல்குந் தவங்கள் குணமொன் றொழுக்க
மொளியோசை தேசு ணர்வுசீர்
மல்கும் பறம்பை மலிகோயின் மேலை
வளர்கின்ற பச்சை மலையே. 2

தொல்லைத் தவங்க ளவையாறு மாறு
துணிவித்த சீர்த்தி முதல்வா
ஒல்லைப் புறம்பு மிருளஞ்சி யோட
வெழின்மா மலர்க்கண் வருமால்

முல்லைப் பொரும்பி னறுகால கதாயின்
முத்தங் கடங்கி நண்மா
மல்லற் பறம்பை மலிகோயின் மேலை
வளர்கின்ற பச்சை மலையே. 3

கிளரும் பவங்க டொறுநா னடந்து
கெழுமித் தழற்கண் முழுகித்
தளரும் பவங்க ளௌமாழ்கு போது
தடமா மலர்க்கண் வருமால்
துளிருங் கரும்பு நெறியப் பொழிந்து
சொறிதேற லுண்டு கயல்சேர்
வளரும் பறம்பை மலிகோயின் மேலை
வளர்கின்ற பச்சை மலையே. 4

திக்கெங்கும் வாழ மணிமுக் குடைந்தண்
ணவையந் திளைப்ப மடவார்
சொக்கங் குனிப்ப வமரேசன் வந்து
தொழுமா மலர்க்கண் வருமால்
பக்கங் குயின்று பனிமாட நீடு
பருமுத் தணிந்து பதுமம்
வைக்கும் பறம்பை மலிகோயின் மேலை
வளர்கின்ற பச்சை மலையே. 5

தாழுங் குணங்க ளவையாறு மாறு
தவிரப் பணிந்து நயமோ
ரேழுந் திருந்தி யிமையோர் வணங்க
வெழின்மா மலர்க்கண் மருமா

லாழுந் தடங்கள் மதுவாய் ததும்ப
வயல்தா மரைத்தண் வயல்சூழ்
வாழும் பறம்பை மலிகோயின் மேலை
வளர்கின்ற பச்சை மலையே. 6

எய்கின்ற வம்போ டிடுகின்ற குன்ற
மெறிகின்ற வேலோ டிவைமுற்
செய்கின்ற தொன்று மறிவின்றி நின்று
திருமா மலர்க்கண் வருமால்
எய்கின்ற வின்றி நறைவாச மல்கி
நிறைகின்ற சாலை யெங்கும்
வைகும் பறம்பை மலிகோயின் மேலை
வளர்கின்ற பச்சை மலையே. 7

துயர்சூழ் குடம்பை நடுவட் பிணித்த
தொழுவித் துளங்கு போழ்தியா
னயல்சூழ லெங்கு மலமந்து தேட
நலம்வந் தளிக்க வருமால்
கயல்சூழ் பொருந்தி யுகளக் கருப்பு
கமுகோடு செந்நெ லலையும்
வயல்சூழ் பறம்பை மலிகோயின் மேலை
வளர்கின்ற பச்சை மலையே. 8

அலரம் புயங்க ளறையா யிரந்தன்
னடியிட் டிசைப்ப நடுவே
பலரும புகழ்ந்து தொழுகின்ற தென்ன
வருமா மலர்க்கண் வருமால்

அலரும் புகொங்கை காவாய் முகங்கை
பதுமத் தடங்கல் பலவும்
வளரும் பறம்பை மலிகோயின் மேலை
வளர்கின்ற பச்சை மலையே. 9

உளமா சுணங்க வுயர்கா மனஞ்ச
வுறுகான லொல்கி மறுகிக்
களமார் கணங்கள் விணையோட வென்று
கமலம் பொருந்தி வருமால்
இளமாதர் கொங்கை விழையால் விளங்க
விரவோடு காலை யறியா
வளமார் பறம்பை மலிகோயின் மேலை
வளர்கின்ற பச்சை மலையே. 10

# திருப்பறம்பூர் ஸ்ரீ தர்மதேவியம்மன்பேரில் கட்டளைக் கலித்துறை

[பின்வரும் பாடல்கள் A. J. அனந்தராஜய்யன் அவர்களால் வெளியிடப்பட்டுள்ள 'நோத்திரத் திரட்டு' என்னும் நூலில் சாணப்படுபவையாகும்.]

அறம்பாவ மீதென் றறியேன்
வினைப்பகை யத்தனையும்
புறம்பாக நின்றிரு பொன்னடி
தாபுயல் போலிதங்கும்
நிறம்பாகும் நேர்மொழி நேரிழையே
வண்டு நித்தநித்தந்
திறம்பாடுஞ் சோலை பறம்பாபுரி
தர்ம தேவதையே. 1

கரமே குவித்தொரு கால்வணங்
கேணன் கபடொழித்து
வரமேகொடுத் தென்னை வாழ்விக்க
வேணு மகிழ்ந்தருள்க
பரமேஸ்வ ரிருபா தார விந்தம்
பணிந்துநித்தஞ்
சிரமே லணிந்த பறம்பாபுரி
தர்ம தேவதையே. 2

மின்னின்ற செஞ்சொல் விரோதி
யினிரு விளக்கொளிபோல்
முன்னின்ற ஞான மொழிச்
சுடரே நின் முகமலர்ந்து
சொன்னின்ற வண்ண ந் துணைசெய்த
கார்வயற் சோலையெங்கு ந்
தென்னின்ற வண்ணப் பறம்பாபுரி
தர்ம தேவதையே. 3

நாவரமுத் தமிழ்நல் வாக்கு
நீயருள் நன்முகமுந்
தாவரமா கநின் தற்பரமே
நின் தயை புரிவாய்
மூவரு மூவுல கத்தர சாளு
முடிதரித்த
தேவரும் போற்றும் பறம்பாபுரி
தர்ம தேவதையே. 4

சாந்தத் தொளியுந் தரளப்
பொற்றோடுஞ் சசிமுகமுங்
காந்தட் கரமுங் கமலப்
பொற்றோடுங் கயல்விழியுங்

கூந்தற் கமுகு நிழலுங்
கண்டேனென் குறை தவிர்ப்பாய்
சேந்தத் திரிபொன் பறம்பாபுரி
தர்ம தேவதையே. 5

ஆவிக்கு நற்றுணை யாகிய
ஞான மளவரியாப்
பாவிக்கு நின்னருள் பாலிக்க
வேண்டும் பரந்தமரர்
வாவிக் குள் வளற் றாமரை
கொணர்ந்தருள் மாதவன்றாள்
சேவிக்கு மெங்கள் பறம்பாபுரி
தர்ம தேவதையே. 6

ஊரு முலகு முறவும்
பிறப்புமுயர் தந்தைதாய்
ஆருஞ் சதமல்ல நின்றாள்
சதமென் றடைந்தவென்னைக்
காரும் நினதருள் காணேனென்
னம்மை கதலிவயல்
சேரும் பறம்பாபுரி மேவிவாழ்
தர்ம தேவதையே. 7

மலையாக வேவந்த வல்வினை
தீர்த்தென் மனங்களைப்பட்

டலையாமல் வாழ்வுதந் தஞ்சலெண
பாய்நல் மாதவர்க்கு
நிலையான தானமும் நேசத்தி
லீந்த நிபுணியிந்திர
சிலைவா ணுதலிப் பறம்பாபுரி
தர்ம தேவதையே. 8

ஒழிக்கும் வினைவகை யெல்லா
மொழித்தும் ஒழிந்தகதி
வழிக்குந் துணைசெய்ய வல்லவளே
வண்மை வயலில்
கொழிக்கும் மந்தாரமுங் கோகிலம்
கூவுங் குளிர்நிழலுஞ்
செழிக்கும் பறம்பாபுரி மேவிவாழ்
தர்ம தேவதையே. 9

கள்ளம தான் மனத் தென்னைக்
காக்கநின் மனங்கசிந்திட்
டுள்ளமதாக வுகந்தருள்
வாயுல கோர் புகழும்
வெள்ளமு தார்வியந் தொண்டை
நாட்டினில் விண்ணோர் புகழும்
தெள்ளமு தேநற் பறம்பாபுரி
தர்ம தேவதையே. 10

# திருப்பறம்பூர் தரும தேவதைப் பத்து

சீரார் திருக்குடைச் செல்வன் பதாம்புயஞ் சென்னி வைத்து
ஏரார் கமுகு நிழலினின் மேவிய ஏகியுந்தன்
காரார் கமலத் திருப்பத மீந்து கருணைபுரி
தாரார் புகழ்பறம் பாபுரி வாழ்தர்ம தேவதையே. 1

உந்த னிருபதத்துண்மை யறிந்தே யுனைவணங்க
எந்தன் வினையி னிடர்தவிர்ப் பாயெங்கள் நாயகியே
பந்த மகற்றிப் பதமே புரிந்தருள் பார்புகழும்
அந்த மிலாத பறம்பா புரியுறை யம்பிகையே. 2

தக்க மலருந் தளிருங் கனியுந் தழைக்கு கின்ற
மிக்க கமுகு தன் னீழலின் மேவிய வன்னையுந்தன்
நக்க மலர்ப்பத நான் மற வேனினி நாயினேற்குத்
துக்கங் கெடுத்துச் சுகமீ பறம்பையிற் சுந்தரியே. 3

கந்தம் பெருத்த கமுகினன் னீழற் கருணைவல்லி
எந்தம் பிறவி யிணையடி யேறிட வென்வினையின்
பந்த மகற்றிப் பதந்தரு வாய்பர மேஸ்வரியே
சுந்த ரமான திருப்பறம் பாபுரிச் சுந்தரியே. 4

பூத்தா மரைவசி நேமீசர் பாதம் புகழ்ந்தறத்தைக்
காத்தாள் கமுகு தன்னீழ லின்மேவுங் கருணைவல்லி
மாத்தாப் பகடன் வருமுன்ன மென்னை மகிழ்ந்து நித்தம்
ஆற்றாத் துயரல்லல் தீர்பறம் பாபுரி யம்பிகையே. 5

அறமே விளங்க வகளங்க மாமுனி யன்பினின்று
திருமாறு கொண்டவத் தீவினைப் புத்தர்ச் செயித்தவளே
நிறமான பச்சை நிறத்தவ ளேநிதி போலுதவுந்
பறவோர் புகழ் பறம்பாபுரி மேவிய சுந்தரியே. 6

எண்ணா யிரமுனி வோர்க்கமு தீந்து மியல்புடனே
துண்ணா கவுச்சந் திரகிரி வாழ்பர மாகமத்தின்
நண்ணாக வுந்த னறுங்கம லப்பத நான்மறவேன்
விண்ணோர் புகழுந் திருப்பறம் பாபுரி வித்தகியே. 7

ஆதாரமான வறநேமி நாத ரடியிணையைத்
தேதா வெனவண்டு பாடமுடிமிசைச் சேர்ந்தவளே
வீதாவும் பிண்டி யுறைபவன் றன்னை விரித்தவளென்
மாதா வெனப்பறம் பாபுரி வாழ்தன்ம தேவதையே. 8

பாதா திகேச மழகுடை யாள்பரஞ் சோதிபத்ம
மாதார முக்குடை யாளயி ராணி யழகினுடன்
சாதா ராசன் சருவாணி யட்சன் மனோகரியே
வேதா கமங்கள் திகழ்பறம் பாபுரி வித்தகியே. 9

கொண்டலை யன்னநங் கொற்றவர் கோனைக் குடதிசைவாய்
நிண்டவர் பச்சைநிறப் பாரிச நாதர்தந் நீள்வரையில்
மண்டலம் போற்று முகுந்தன் மகிபன் மனமகிழுந்
தண்டலை சூழ்பறம் பாபுரி வாழ்தன்ம தேவதையே. 10

காந்தக்கல் வாசியும் போரே கலந்தட்ட கன்மங்களைத்
தீர்ந்திட்டு நல்லறஞ் செய்தவ ளேபசுஞ் செவ்விகுன்றுக்
கூந்தற் கமுகின் கொடிபட ரேவஞ்சிக் கொம்பனைய
சாந்திற் பரிமளத் தாய்வைகை வாழ்தன்ம தேவதையே. 11



# கரந்தை முனிகிரி ஸ்ரீ குந்து நாதாஷ்டகம்

**முனிகிரி ஸ்ரீ குந்து நாதாஷ்டகம்** என்னும் தோத்திர நூல் கரந்தையைச் சார்ந்த ஜைன பக்தர்களால் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலிலுள்ள தோத்திரங்கள் இங்கு தரப்படுகின்றன.

அனந்தஞான யுக்தாய சித்தக்ஷேத்திர நிவாஸினே
ஸ்ரீ குந்துநாத தேவாய, நமோஸ்து பரமேஷ்டினே.

1. உததி பூ நப ஸுஷிர விப்ரம ஜாதருப ஸுவிக்ரஹம்,
கமல பத்ரக ருசிர பாஸ்வர நேத்ர யுக்ம விலாஸினம் ।
அகில பவ்யக நத ஜனார்ணவ போதருப பதத்வயம்'
குவலயஸ்தித முனிகிரிஸ்தித குந்துநாதமஹம் பஜே ॥

2. அமித போகத புவன ஸம்ஸ்தித ஸர்வபூதி விவர்ஜிதம்,
விமல தர்மத புவி ஸுபோதக ஸர்வபோத ஸுதாரணம் ।
ஸகல தைவத நிவஹஸ்த்க்ருத மந்தராத்ரி ஸுபூஜிதம்,
குமதிவர்ஜித முனிகிரிஸ்தித குந்துநாதமஹம் பஜே ॥

3. நிகிலராஜக மகுடபத்த ஸுஸர்வ ஸைன்ய மஹீபதிம்,
ககன சாரண ஸுரகணான்வித தேவநாத ஸுஸேவிதம் ।
விவத ஸைன்யக சதுரமந்த்ரிக சக்ரவர்த்தி ஸுபூஜிதம்,
குநய தூஷித முனிகிர்ஸ்தித குந்துநாதமஹம் பஜே ॥

4. விஜிதமானஸ மதநிஷூதன விக்ரமாஹத லோபகம்,
மகரகேது வித்ருத ஸுபௌஷ்பக பாண விக்ரம ஹாரகம் ।
ஸுரவரைரபி முனிவரைரபி வந்திதாங்க்ரி ஸரோருஹம்,
குவலயஸ்தித முனிகிரிஸ்தித குந்துநாதமஹம் பஜே ॥

5. ககநமத்யக சிசிர பூதல வேதிகோபரி ஸம்ஸ்திதம்,
ஹ்ருதய கல்மஷ தலன சுத்த நிஜாத்ம ஸம்விதிதார்த்தகம்।
விகத தூஷண பரிஹதாகில ஜைநதர்ம சுரக்ஷகம்,
குவலயஸ்தித முனிகிரிஸ்தித குந்துநாதமஹம் பஜே॥

6. புனராண்யகதம் தபஸ்தித ஷடங்கயோக தவானலம்,
சகல தர்ம விதூனனம், குலதாத்மகேவல போதகம் ।
தனத விதிக்ருத ஸமவசரண மதிஷ்டிதம் நப சுத்திதம்,
குமதி பரிஹர முனிகிரிஸ்தித குந்துநாதமஹம் பஜே ॥

7. முதித சேதஸம் வித்ருத தைர்யகம் ஜாதபோத சுதாரகம்,
திவிஜ துந்துபி மலய மாருத தேவபுஷ்ப ஸுவ்ருஷ்டிகம் ।
கனகரத்ன ஸுபதன பூஷித விஸ்மயான்வித தாரணம்,
குவலயஸ்தித முனிகிரிஸ்தித குந்துநாதமஹம் பஜே ॥

8. ஸகலதேச விஹாரணம், க்ருத தர்ம தத்வ ஸுவேஷ்டிதம்,
ஸகல பவ்யக நதஜனாம்புஜ லாசனைக திவாகரம் ।
விபுல நிர்மல மனஸி சாதத பவ்யதர்ம ஸுரக்ஷகம்,
குவலயஸ்தித முனிகிரிஸ்தித குந்துநாதமஹம் பஜே ॥

9. ஸமவசரண விபூதிரிந்திர சதார்ச்சநீய விமுக்திகம்,
பிரதிமாயோக தபஸ்க்ருதாந்த யோக மோஹ விதாரணம் ।
அமித சுகப்ருத மோக்ஷலக்ஷ்மிக கடாக்ஷ வீக்ஷித தேஹகம்,
குவலயஸ்தித முனிகிரிஸ்தித குந்துநாதமஹம் பஜே ॥

10. வகுல சம்பக கதலிதாடிம சூதகாதி ஸமன்விதம்,
கமல கைதக குமுத பாகுல புஷ்பகைக மனோஹரம் ।
மணிஹிரண்யக ஸுரஜத ராஜத திக் கதம்ப விலாசினம்,
குவலயஸ்தித முனிகிரிஸ்தித குந்துநாதமஹம் பஜே ॥

11. இதிமயாக்ருத குமுத நாயக ஸ்தோத்ர ரத்ன மிதம்முதா,
முதித மானஸ சிசுஜனாதிக தோஷகாரி சதானுதம்!
கவிவரேண ச வ்ருஜினஹந்துக மஷ்டகம் ச ஸௌதாரகம்,
குவலயஸ்தித முனிகிரிஸ்தித குந்துநாதமஹம் பஜே!!

12. ஸ்ரீமந்நரேந்திர கசரேந்திர ஸௌரேந்திர நாக,
ராஜேந்த்ர மௌலி மணிரஸ்மி விபூஷிதாங்க்ரிம்!
தேவாதி தேவ மகளங்க மனந்த போதம்,
ஸ்ரீ குந்துநாத ஜினநாத மஹம் நமாமி!!